4 Merchant Banking Division என்ற அலுவலகம் டெல்லியில் ஏற்படுத்தியுள்ளது.

**5 மாநில நிதிக் கழகம் (State Financian Corporation)SFC**

1951ல் மாநில நிதிக் கழகச் சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநில அரசு நிதிக் கழகம் ஏற்படுத்தியுள்ளது. இது குறுகிய மற்றும் மத்திய கால நிதி உதவிகளை தொழில் நிறுவனங்களுக்கு அளித்து வருகிறத

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (Tamil Nadu Industrial Development Corporation) என்ற மாநில நிதிக் கழகத்தை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது.

இது கடன்பத்திரங்களை வெளியிட்டு தனக்கு தேவையான நிதி ஆதாரங்களை பெருக்குகின்றது. மேலும் பொது மக்களிடமிருந்து நிலையான வைப்புகளையும், ரிசர்வ் வங்கி, பாரத வங்கி மற்றும் அரசிடமிருந்து கடனாக நிதி பெறுகின்றது. இவ்வாறு பல்வேறு மூலங்கள் மூலம் பெறப்பட்ட நிதிகளை வைத்து தொழில்முனைவோருக்கு ஆலோசனை, நிதி, வசதி செய்து கொடுக்கின்றது. சிறு தொழில்களுக்கு தேவையான நிலம், தொழிற்கூடம், கச்சாப்பொருள், இயந்திரங்கள் பின்தங்கிய இடங்களில் செயல்படும் சிறுதொழில்களின் மேம்பாடு போன்ற விரைவாக்க பணிகளை செய்து வருகின்றது.

**வழங்க கூடிய உதவிகள்**

மாநில நிதிக்கழகங்கள் பின்வரும் உதவிகளை தொழிற்கூடங்களுக்கு வழங்கி வருகின்றது.

1. தொழிற்கூடங்கள் வெளியிடும் கடன்பத்திரங்களை வாங்குவது, அவர்களுக்கு கடன் முன்பணம் வழங்குவது, திருப்பிசெலுத்தும் கடன் இருபது வருடங்களுக்கு மேல் செல்லாமல் கடன் வழங்குவது.
2. மூலதனத்தை அல்லது வணிக வங்கிகள் அல்லது கூட்டுறவு சங்கங்கள் மூலம் கம்பெனிகள் பெற்ற கடனுக்கு உத்திரவாதம் அளிப்பது.
3. பெரிய தொழில் நிறுவனங்கள் வெளியிடும் கடன்பத்திரம், பங்குகளை, பத்திரங்களை ஒப்புறுதி செய்வது.
4. நிலம், கட்டிடம், இயந்திரம், பொறிகலன் போன்ற சொத்துக்களை வாங்குவது.

## 6. இந்திய தொழில் மறு கட்டமைப்பு வங்கி (Industrial Reconstruction Bank of India)

இந்திய மறுகட்டமைப்பு கழகத்தை (IRC) மத்திய அரசு 1971ல் ஏற்படுத்தியுள்ளது. இதன் நோக்கமானது நலிவடைந்த, மிகவும் நிதிநிலைமையில் மோசமாகி தொழில் நிறுவனத்தை மூடும் தருவாயில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு மறு வாழ்வு அளிப்பதும் அதற்கு மீண்டும் மறுவாழ்வு கட்டமைப்பு செய்வதேயாகும். இத்தகைய நலிவடைந்த மூடப்படும் நிலையில் உள்ள தொழில்களுக்கு மறுவாழ்வு அளிக்க பல உதவிகளை செய்கின்றது. ஆனால் அரசு எதிர்பார்த்த அளவுக்கு இந்தக் கழகம் (IRC) திறம்பட செயல்படவில்லை. ஆகவே 1985 ஆம் வருடம் மார்ச் 20ல் தொழில் மறுகட்டமைப்பு வங்கி சட்டம் 1984ல் தொழில் மறுகட்டமைப்பு வங்கி ஏற்படுத்தப்பட்டன. கழகத்தில் உள்ள மொத்த சொத்துக்களையும் பொறுப்புக்களையும் இந்த வங்கிக்கு மாற்றப்பட்டன.

இந்த வங்கியானது (IRBI) நலிவடைந்த தொழில்கூடங்களை நவீனப்படுத்துதல், விரிவாக்கம், மறுகட்டமைப்பு போன்ற பணிகளுக்கு நிதி உதவி அளிக்கின்றது.

## வினாக்கள்

1. தொழில் நிதிக்காக யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியாவின் பணிகளை விவரி?
2. இந்திய தொழில் நிதி அமைப்பில் உயர்நிலையில் செயல்படும் இந்திய வளர்ச்சி வங்கியின் (IDBI) சேவைகளை விளக்குக.

3. தொழில் நிதிக் கழகத்தின் பணிகளை கூறுக. அது எவ்வாறு இந்திய மூலதன சந்தையை மேம்படுத்துகின்றது?

4. இந்திய தொழில் வளர்ச்சிக்கு தொழில் கடன் மற்றும் முதலீட்டு கழகம் ஆற்றும் பணிகளை விவரி?

5. மாநில நிதிக் கழகத்தின் நோக்கம், நிதிமூலங்கள், அதன் செயல்பாடுகளை விவரிக்க.

6. இந்திய தொழில் மறுகட்டமைப்பு வங்கியின் சேவைகளை மதிப்பிடுக.

❖❖❖

# பாடம் – 18

## கடன் கொள்கைகள் II
## (Lending Policies - II)

இந்தியாவில் கடன் கொள்கையை வழங்கும் நிதி நிறுவனங்களாகிய ADB, SBI, LIC, GIC, SHCIL, NSIC, NIDC, SIDBI, SSIDC மற்றும் வணிக வங்கிகள் ADB, SBI, LIC, GIC, SHCIL, NSIC, NIDC, SIDBI, SSIDC மற்றும் வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு பலவகையில், நிதி வசதி அளித்து வருகின்றன. மேலும் தொழில் நுட்ப உதவிகளை செய்கின்றது.

பின்வரும் நிதி நிறுவனங்களின் தோற்றம், நோக்கம், நிதி உதவிகள், ஆற்றும் பணிகள் அதன் செயல்பாட்டு எல்லை ஆகியவற்றை காணலாம்.

### 1. ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank(ADB)

1966ஆம் வருடம் டிசம்பர் மாதம் ஆசிய வளர்ச்சி வங்கி ஏற்படுத்தப்பட்டன. இது ஒரு மண்டல நிதி நிறுவனமாகும். இதன் தலைமை அலுவலகம் மணிலா, பிலிப்பைன்ஸில் உள்ளது. இது United Nations Economic Commission for Asia and Far East என்ற அமைப்பின் கீழ் செயல்படுகிறது.

### நோக்கங்கள் (Objects)

ADB யின் நோக்கங்கள் பின்வருமாறு

1. மத்திய ஆசிய மண்டலத்தில் உள்ள பொது மற்றும் தனியார் முதலீட்டு வளர்ச்சியை மேம்படுத்துவது.

2. கிடைக்கக் கூடிய நிதிவளங்களை மேம்படுத்துவது, மண்டலம், துணைமண்டலம், தேசிய அளவில் தயாரிக்கப்பட்ட திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது.

3. இதில் வட்டார அளவில் உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு உதவும் பொருட்டு அவர்களை ஒருங்கிணைந்து அவர்களுடைய திட்டம், கொள்கைகள் மற்றும் இருக்கக்கூடிய வளங்களை முறையாக பயன்படுத்துகிறது.

4. ஐக்கிய நாடு அமைப்புடன் ஒத்துழைப்பு வழங்குவது.

### பணிகள் (Functions)

### 1. நிதி அளிப்பது (To Provide financial Assistance)

கடினமான நிதி (Hard Loans) என்ற பெயரில் சாதாரண கடனும், மென்மையான நிதி (Soft Loan) என்ற பெயரில் சிறப்பு நிதி வழங்கப்படுகிறது. எந்தவித திட்டத்திற்கும் உடனடியாக கடன் வழங்கப்படுகின்றது. குறைந்த பட்சம் மற்றும் அதிக பட்சம் வரம்பு கடனுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம், தொழில்நுட்பம், நிதி போன்றவற்றை அடிப்படையாக கொண்ட தொழில் திட்டத்திற்கு நிதி உதவி அளிப்பது.

2. தொழில் நுட்ப உதவி (Provide Technical Assistance)

தலைமை அலுவலகத்தின் மூலம் ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவது, மேலும் தொழில் நுட்ப வல்லுநர்களை நியமனம் செய்து தொழில்துறைக்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குவது, தொழில் நுட்ப உதவிக்கான சிறப்பு நிதியை இந்த வங்கி ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் ஏராளமான தொழில் நிறுவனங்களுக்கு தொழில் நுட்பங்களை வழங்க முடிகிறது.

ஆ. இதர பணிகள்

தொழில் நிறுவனங்களின் செயல்பட்டு அளவிடுவது மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதாகும்.

2. பாரத ஸ்டேட் வங்கி (State Bank of India)(SBI)

பாரத ஸ்டேட் வங்கி தேசீய மயமாக்கப்படுவதற்கு முன்பு அது இம்பீரியல் வங்கியாக செயல்பட்டு வந்தது. அதில் தனிநபர்களின் பங்கு முதலே பெரும்பான்மையான காணப்பட்டது. 1955 ஜூலை மாதம் 1ம் தேதி பாரத ஸ்டேட் வங்கி சட்டம் 1955ன் கீழ் பாரத ஸ்டேட் வங்கி ஏற்படுத்தப்பட்டன. இது ரிசர்வ் வங்கியின் ஏஜென்டாக செயல்படுகிறது. இது ஒரு சட்டமுறை கழகமாகும். இந்தியாவில் அதிக எண்ணிக்கையுடைய கிளைகளைக் கொண்ட வங்கி பாரத ஸ்டேட் வங்கியாகும்.

மூலதன அமைப்பு (Capital Structure)

ஆரம்பத்தில் ரூ.20 கோடி அங்கீகரிக்கப்பட்ட முதலுடன் பாரத ஸ்டேட் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. வெளியீடு செய்த பங்கு முதல் 90% பங்குகளை இந்திய ரிசர்வ் வங்கி வாங்கியுள்ளது. பாரத ஸ்டேட் வங்கியின் நிர்வாகம் மத்திய இயக்குநர் அவை (Central Board of Directors) வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியின் அனுமதியுடன் மத்திய அரசு இதன் தலைவரை நியமனம் செய்கின்றது.

பணிகள்

1. பொதுமக்களிடமிருந்து டெபாசிட் பெறுவது பின்னர் பெற்ற டெபாசிட்டை வர்த்தக நிறுவனங்களுக்கு கடனாக வழங்குவது.
2. விவசாயக் கடன் வழங்குதல்.
3. நகைக்கடன் வழங்குவது.
4. பாதுகாப்பு பெட்டக வசதியை ஏற்படுத்தி நகை, ஆவணங்களை பாதுகாப்பாக வைப்பது.
5. பணவிடை, வழங்குவது, பயணக் காசோலையை வழங்குவது.
6 அந்நிய செலவாணி நடவடிக்கையில் ஈடுபடுதல்.
7. வணிக நடவடிக்கைகளை மேம்படுத்துவது.

இது ஒரு மாபெரும் வங்கியாக செயல்படுவதால் மத்திய கால கடன்களை தொழிற் கூடங்களுக்கு வழங்குகின்றது.

கடன் கொள்கைகள் (Lending Policy)

முன்பணம் மற்றும் கடன் என்ற வகையில் பொதுக் கம்பெனி மற்றும் தனியார் கம்பெனிக்கு கடன் வழங்குகின்றது. சிறுதொழில்களுக்கும் கடன் வசதி செய்து தருகின்றது. SBI சட்டம் பிரிவு 33ன் படி பெரிய மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குகின்றது.

1977ல் தொழில் முனைவோர் திட்டம் அறிவித்துள்ளது. அதன் மூலம் உற்பத்தி, சேவை, ரிப்பேர் செய்யும் நிறுவனங்கள் பயன் அடைகின்றன. மேலும் மேலாண்மை சம்பந்தப்பட்ட ஆலோசனைகளை வழங்குகின்றது.

கிராமப்புறங்களில் செயல்படும் தொழில் நிறுவனங்களுக்கு ஒருங்கிணைப்பு திட்டம் மூலம் பல உதவிகளை செய்து வருகிறது. கூட்டுறவு சந்தை, உணவு பதப்படுத்தல் சங்கம் கிட்டங்கி போன்ற வசதிகளை ஏற்படுத்தி தருவது.

**கிராமப்புற வளர்ச்சிக்கு பாரத வங்கி ஆற்றும் பணிகள்**

1. பண மாற்றும் வசதியை கிராமப்புறங்களில் ஏற்படுத்துதல்
2. கூட்டுறவு வங்கிகளுக்கு கடன்வசதி அளிப்பது.
3. நிலவள வங்கிக்கு நிதி உதவி அளிப்பது.
4. கிராமத்தை தத்து எடுக்கும் திட்டம்.
5. கிராமங்களில் வேளாண்மை வளர்ச்சி வங்கி.
6. கிட்டங்கி ரசீதை வைத்துக் கொண்டு கடன் வழங்குதல்.
7. வேலைவாய்ப்பு திட்டம்.

1972ல் வணிகர் வங்கி பிரிவு (Merchant Banking Division) என்ற ஒரு திட்டத்தை பாரத ஸ்டேட் வங்கி துவங்கியுள்ளது. 1987ல் பாரத வங்கி பரஸ்பர நிதி திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

**3. வணிக வங்கிகள் (Commercial Banks)**

இந்தியாவில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் துறை வங்கிகள் யாவும் வணிக நிறுவனங்களுக்கு குறுகிய கால கடன்களை வழங்குகின்றது. பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை பெறுவது, வர்த்தக நிறுவனங்களுக்கு கடன் வழங்குவது.

19 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் மற்றும் தனியார் வங்கிகளும் வணிக வங்கிளாக செயல்படுகின்றன.

இது கம்பெனி வெளியாகும் பங்குகள், கடன் பத்திரங்களை ஒப்புறுதி செய்கின்றது. கம்பெனி பங்குகளையும் கடன் பத்திரங்களை வாங்குகின்றது. முன்னுரிமை பெற்ற தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கின்றது.

**4. ஆயுள் காப்பீட்டு கழகம் (Life Insurance Corporation) LIC**

இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் 1956ல் ஆயுள் காப்பீட்டுக் கழக சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு சட்டமுறை கழகமாகும். இந்தக் கழகம் மனிதனின் ஆயுளை மட்டும் காப்பீடு செய்யப்படுகிறது. இது ஒரு முன்னுரிமை பெற்ற கழகமாக விளங்குகின்றது. பொது மக்கள் கழகத்திற்கு செலுத்தும் முனைமத் தொகையை ஆயுள் காப்பீடு நிதியாக உருவாக்குகின்றது. இந்த நிதியை கழகம் இந்திய பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சிக்கு நிதி உதவி அளிக்கின்றது. தொழில் நிறுவனங்களுக்கு, மத்திய, மாநில அரசு, மற்றும் வங்கிகளுக்கு தேவையான நிதி உதவி அளிக்கின்றது.

**கடன்கொள்கை (Lending Policy)**

காப்பீடு சட்டம் 1938 பிரிவு 27A யின்படி LIC பின்வரும் மூன்று துறைகளில் தனது நிதியை முதலீடு செய்கின்றது.

1. மொத்தம் உள்ள 100% நிதியில் 50% நிதியை மத்திய, மாநில அரசுகளை வெளியிடும பிணையங்களில் முதலீடு செய்கின்றது.
2. அங்கீகாரம் பெற்ற பொதுத்துறை நிறுவன பிணையங்களில் 35% முதலீடு செய்கின்றது.
3. மீதமுள்ள 15% பிற துறைகளில் முதலீடு செய்கின்றது.

அங்கீகாரம் பெற்ற பிணையங்கள் என்பது பொதுக்கம்பெனியின் பங்குகள், கடன்

பத்திரங்கள், அசையாத சொத்துக்கள், முதல் அடமானம், பாலிசு மீது கடன், வங்கி வைப்புகளில் ரசீது மீது கடன், கூட்டுறவு சங்கம், பட்டியலில் உள்ள வங்கிகளின் பங்குகள், கடன் பத்திரங்களில் முதலீடு செய்கின்றது. மத்திய அரசு அனுமதித்த அளவாகிய 30% நிதியை LIC சாதாரண பங்குகளில் முதலீடு செய்கின்றது. மேலும் நமது நாட்டின் பொருளாதாரம், சமூக வளர்ச்சி, மற்றும் அரசு அறிவித்த நலத்திட்டங்களுக்கு தேவையான நிதியை LIC வழங்குகின்றது.

### நிதியின் மூலங்கள் (Sources of Funds)

LIC யின் செலுத்திய முதல் ஆரம்பக் கட்டத்தில் ரூ.5 கோடியாகும். முனைமம் வசூலித்தல், அரசிடமிருந்து பெறப்பட்ட கடன், ரிசர்வ் வங்கியின் மூலம் பெற்ற கடன் ஆகியவை LIC க்கு கிடைக்கும் நிதி மூலங்களாகும்.

### பணிகள் (Functions)

கம்பெனி வெளியிட்ட பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களில் LIC முதலீடு செய்வதால் கம்பெனிக்கு நிதி உதவி கிடைக்கின்றது. மேலும் பங்குகள், கடன்பத்திரங்களை LIC ஒப்புறுதி செய்வதால் கம்பெனிக்கு நிதி வசதி கிடைக்கிறது.

மேலும் தொழிற் கூடங்களுக்கும் ஆலைகளுக்கும் நிதிவசதி அளிக்கின்றது. பங்கு சந்தையில் உள்ள அரசு பத்திரங்களிலும், பொதுத்துறை பிணையங்களிலும் முதலீடு செய்கின்றது. தொழிற் பேட்டை, சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக குறுகிய மற்றும் மத்திய கால கடன்களை வழங்குகிறது.

1988ல் LIC பரஸ்பர நிதி திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

## 5. பொதுக்காப்பீட்டுக் கழகம் (General Insurance Corporation) GIC

பொதுக்காப்பீட்டுக் கழகம் ஒரு சட்டமுறை கழகமாகும். இது மனிதனின் ஆயுளை தவிர மற்றவைகளான சரக்கு, கட்டிடம், விலங்குகள், இயந்திரம் போன்றவைகளின் ஆயுளை காப்பீடு செய்கின்றது. கடல் காப்பீடு, தீக்காப்பீடு, மோட்டார் வாகன காப்பீடு, பயிர் காப்பீடு, களவு காப்பீடு, போன்ற பல விதமான காப்பீடு தொழில்களில் பொதுக்காப்பீடு கழகம் ஈடுபடுகின்றது. இந்தியாவில் 1972ஆம் ஆண்டு பொதுக்காப்பீட்டு கழகம் ஏற்படுத்தப்பட்டன. பொதுக்காப்பீட்டுக் கழகத்தின் கீழ் நான்கு துணைக் கம்பெனிகள் உள்ளன.

### அவை

1. யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
2. ஓரியண்டல் மற்றும் பயர் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
3. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
4. நியூ இந்தியா ஆஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

### நோக்கங்கள்

பொதுக்காப்பீட்டு கழகத்தின் நோக்கமானது பொருள் மற்றம் உடமைக்கு இடர் வந்தால் மட்டுமே நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது.

### பணிகள்

LIC ஐ போலவே GIC யும் பணச்சந்தையிலும், மூலதனச் சந்தையிலும் ஈடுபடுகின்றது. கம்பெனி பங்குகளையும், கடன் பத்திரங்களையும் ஒப்புறுதி செய்கின்றது. காப்பீடு சட்டம் 1938ன் படி பல மூலங்களில் தனது நிதியை முதலீடு செய்கின்றது.

## 6. தேசிய தொழில் வளர்ச்சிக் கழகம் (National Industrial Development Corporation) (NIDC)

இது 1954ல் தனியார் கம்பெனியாக தொடங்கப்பட்டது. அதன் தொடக்க முதல் ரூ.1 கோடியாகும். இந்தக் கழகம் ஏற்படுத்தியதன் நோக்கமே நாட்டில் உள்ள தனியார், மற்றும்

பொதுத்துறை தொழிற்சாலைகளிடையே நிலவும் பிரச்சினையை, தீர்ப்பது, இரண்டுக்குமிடையே நல்ல சுமூகமான உறவு ஏற்படவும், தொழில் அமைப்பில் விரிசல்கள் ஏற்படாமல் தடுப்பதற்கும் ஆலைகளுக்கும் வழங்கப்படும் மானியத்தை முறையாக பயன்படுத்துக்கின்றார்களா என மேற்பார்வையிடுவதும் மத்திய அரசின் முகவராகவும் இது செயல்படுகிறது. குறுகிய கால கடன் வழங்குவதன் மூலம் காட்டன் டெக்ஸ்டைல் ஆலைகளுக்கு நிதி கிடைக்கின்றது. மற்றும் வாடகைக்கு இயந்திரங்களை வழங்குவது இதன் பணியாகும்.

## 7. தேசிய சிறுதொழில் கழகம் (National Small Industries Corporation) NSIC

1956ஆம் ஆண்டு தேசிய சிறு தொழில் கழகம் ஏற்படுத்தப்பட்டன. இது முற்றிலும் இந்திய அரசுக்கு சொந்தமானது. சிறு தொழில்களை வளர்ச்சியடைய செய்வதும் அதனை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும். இதன் தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ளது. இதற்கு நாடெங்கிலும் பல இடங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன.

### பணிகள்

1. வாடகை கொள்முதல் திட்டத்தின் கீழ் இயந்திரங்களை சிறு தொழில்களுக்கு வழங்குவது.
2. பயிற்சி மையம் ஏற்படுத்தி தொழில் முனைவோர்களுக்கு பயிற்சியும், தொழில் நுட்ப வசதிகளை செய்து கொடுப்பது.
3. சிறு தொழில்களுக்கு கச்சாப் பொருள் வழங்குவது.
4. சிறு தொழில் கூடங்கள் உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்ய அரசு துறைகளுக்கு அனுப்புவது.
5. சிறு தொழில்களுக்குரிய திட்டங்களை நிறைவேற்ற உதவுவது.

## 8. இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (Small Industries Development Bank of India)(SIDBI)

சிறுதொழில்களை மேம்படுத்த தேசீய அளவில் ஒரு நிறுவனம் இல்லாத குறையை போக்க இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டன. 1990ஆம் ஆண்டு ஏப்ரல் 2ம் தேதி இந்த வங்கி ஏற்படுத்தப்பட்டன. இதன் செலுத்திய முதல் ரூ.250 கோடியாகும். இதனை IDBI ஐ தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. 1990ல் மார்ச் 31ல் சிறுதொழில் வளர்ச்சிக்கான நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இதில் ரூ.4,200 கோடி டெபாசிட் உள்ளது. தற்போதைய பங்கு நிதி ரூ.500 கோடியாகும்.

### கடன்கொள்கைகள் (Lending Policy)

சிறு தொழில்களுக்கு கடன் வழங்குவதே இதன் நோக்கமாகும். சிறுதொழில்கள், கிராமத் தொழில், குடிசைத் தொழில், குறுந்தொழில்களை நாட்டில் பரவலாக்கி அதற்கு தேவையான கச்சாப் பொருள், போக்குவரத்து, மின்சாரம், தண்ணீர் வசதி, இயந்திரம், சந்தையிடுகை போன்ற வசதிகள் செய்து கொடுப்பது இதன் நோக்கமாகும். சிறுதொழில்கள் நலிவடையாமல் காப்பாற்றவும், அதன் பிரச்சனைகளை தீர்க்கவும், விரிவுப்படுத்தவும், நவீனப்படுத்தவும் மூடும் தருவாயில் உள்ள நிறுவனங்களுக்கு மறுவாழ்வு வழங்குவது இதன் நோக்கமாகும்.

## 9. இந்திய பங்கு பிடிப்பு கழகம் லிமிடெட்(SHCIL)(Stock Holding Corporation of India Ltd.)

IDBI, IFC, ICICI, LIC, GIC, UTI, IRBI ஆகிய ஏழு நிதி நிறுவனங்கள் அக்டோபர் மாதம் 1987ல் இந்திய பங்கு பிடிப்பு கழகம் (SHCIL) என்ற ஒரு சேவை அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். இந்த ஏழு நிதி நிறுவனங்கள் சேர்ந்து ரூ.7 கோடிக்கு பங்கு முதல் செலுத்தியுள்ளது.

**நோக்கங்கள்**

உறுப்பினர் நிதி நிறுவனங்களிடமும் பங்கு சந்தையிலும் பங்குகள் எளிதாக விரைவாக மாற்றிக் கொள்ள வசதி அளிப்பது, பங்கு சந்தையையும் மூலதனச் சந்தையும் நிலையாக இருக்க வைப்பது, பங்கு வணிக நடவடிக்கை முடிந்த பிறகும் சேவை அளிப்பது, பரஸ்பர சேவை அளிப்பது இதன் நோக்கமாகும்.

**அமைப்புமுறை**

இந்த கழகத்தை நிர்வாகம் செய்யும் உரிமை இயக்குநர் வசம் உள்ளது. முழு நேர தலைவரே இதன் அன்றாட நிர்வாகத்தை கவனித்து வருகிறார். இதன் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ளது.

**பணிகள்**

இது பங்கு மாற்றும் ஏடுகளில் எழுதும் முறையை குறைக்கின்றது. பங்குகளை நேரடியாக மாற்றுவதற்கு பதிலாக ஏடுகளில் மாற்றிக் கொள்கின்றன. பங்கு மாற்றம் ஏடுகளில் எழுதிக் கொள்வதால் நேரம் மிச்சப்படுகிறது. விரைவாக பங்கு மாற்றம் நடைபெறுகிறது.

### 1. தீர்வு சேவை (Clearing Services)

பெரிய பங்கு சந்தையில் பங்குகளை தீர்க்கும் மையமாக இது விளங்குகிறது. புரோக்கரால் வாங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட பங்குகளை வெளிப்படுத்துகின்றது.

### 2. டெபாசிட் சேவை (Depository Services)

பங்காதாயம், போனஸ் போன்றவைகள் வசூலித்து தனது பாதுகாப்பின் கீழ் வைத்துக் கொள்கிறது.

### 3. பிறசேவைகள்

பங்காதாயம், வட்டி போன்றவைகளை வசூலித்து வங்கியில் டெபாசிட் செய்வது, மேலாண்மை பற்றிய செய்திகளை நிறுவனங்களுக்கு அளிப்பது சந்தை மேம்பாடு, தொழில் நுட்ப போன்ற வசதிகளை அளிப்பது.

4. ஏற்றுமதியாளருக்கு உதவுவது, சிறுதொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தையிடுகை செய்வது போன்றவை இதன் பணிகளாகும்.

## 10. மாநில சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (State Small Industries Development Corporations)

மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள சிறு தொழில்களின் தேவைகளை பூர்த்தி செய்ய மாநில அளவில் மாநில சிறு தொழில் வளர்ச்சி கழகம் என்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கழகம் கம்பெனிச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டன.

பின்வரும் இதன் செயல்பாடுகள் மூலம் சிறுதொழில்கள் பயன்பெறுகின்றன.

1 சிறுதொழில்களுக்கு தேவையான கச்சாப்பொருட்களை வாங்குவது, விநியோகம் செய்வது.

2. வாடகை கொள்முதல் திட்டத்தின் கீழ் சிறுதொழில் முனைவோர்களுக்கு இயந்திரங்களை அளிப்பது.

3. உற்பத்தி நிறுவனங்களுக்கு மேலாண்மை உதவி அளிப்பது.

4. நாட்டில் தொழிற்பேட்டைகளை முக்கிய நகரங்களில் உருவாக்குவது.

5 தொழில் நுட்ப அமைப்பு முறையில் கலந்துக் கொண்டு சிறு தொழில் நிறுவனங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவது.

6. சந்தையிடுகை பணிகளை செய்வது.

மேலும் சிறுதொழில் பொருட்களின் தேவை, சந்தை நிலையை ஆய்வு நடத்துவது, கச்சாப்பொருள் வளர்த்தை சோதிப்பது, சந்தை உதவி திட்டத்தின் (Market Assistance Scheme) கீழ் சந்தையை மேம்படுத்துவது பல்வேறு, இடங்களில் பொருட்காட்சி நடத்துவது, கைவினை பொருட்களை விற்பது, ரெடிமேடு துணிகள், விளையாட்டு பொருட்கள், கைத்தறி துணிகளை விற்பதும் இதன் சேவையாகும்.

## சிறுதொழில்கள்

**(Small Scale Industries)**

நமது நாடு வளர்ந்து வரும் நாடாக (Developing Countries) விளங்குவதால் இயற்கை வளமும், பொருளாதார வளமும் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் குடிசைத் தொழில்கள் (Village Cottage Industries) சிறு தொழில்கள் (Small Scale Industries) (SSI) மற்றும் குறுந்தொழில்கள் (Tiny Sectors) தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கின்றது.

### தொழில் அமைப்பின் வகைகள் (Types of Business system)

நமது நாட்டில் தொழில் அமைப்பை மூன்று வகையாக பிரிக்கலாம்.

அவை

1 பெரிய தொழில்கள் (Large Scale Industries or Fron LIne Industries)

2. நடுத்தர தொழில்கள் (Medium Scale Industries)

3 சிறுதொழில்கள் (Small Scale Industries) (SSI) மேலே சொன்ன மூன்று தொழில்களும். பின்வருவனவற்றை கருத்தில் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அ) தொழில்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை.

ஆ) தொழிலில் முதலீடு செய்த தொகையின் மதிப்பை கணக்கில் கொண்டு.

இ) விற்பனையின் அளவு அல்லது அதன் மதிப்பைக் கொண்டு.

ஈ) மேலாண்மையின் வகைகள் ஆகிய காரணிகளை கொண்டு தொழில் அமைப்பை வகைப்படுத்தலாம் எல்லா நாடுகளிலும் சிறு தொழிலானது பொதுவான தொழிலாக காணப்படுகின்றது. சிறுதொழில்கள் எல்லா நாடுகளிலும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.

### சிறு தொழில் என்றால் என்ன? What is Small Business?

சிறு தொழில் என்பது தொழிலுக்கு தேவையான நிலையான சொத்துக்களில் (Fixed assets) குறைந்தது ரூ. ஒரு கோடிக்கு முதலீடு செய்யும் பணத்தின் அடிப்படையில் அல்லது தொழில் கூடத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அல்லது இரண்டையும் பொறுத்து அமைகின்றது.

நிலையான சொத்து என்பது நிலம், கட்டிடம், பொறிகலன் இயந்திர சாதனங்களாகும். (Small Scale Industry are based on the amount of Investment in Fixed assets atleast Rs.1 crore or on the number of persons employed or both)

### சிறுதொழிலின் இலக்கணம் (Definition of Small Scale Industry)

1955ம் ஆண்டில் சிறுதொழில் இலக்கணம் பின்வருமாறு வரையறுக்கப்பட்டது. இந்தியாவில் ஒரு தொழில் கூடத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 50 நபர்களுக்கு

(மின்சக்தி பயன்படுத்தும் தொழிற்சாலையாகயிருந்தால்) குறைவாகவும் (Less than 50 persons if using power) மற்றும் 100 நபர்களுக்கு (மின் சக்தி பயன்படுத்தாத தொழிற்சாலையாகயிருந்தால்) குறைவாகவும் (Less than 100 persons of Without Using Power) மற்றும் நிலையான சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 5 இலட்சத்திற்கு மிகையாகாமல் இருக்க வேண்டும்.

நிலையான சொத்து என்பது நிலம், கட்டிடம், இயந்திர தளவாட சாமான்களை குறிக்கின்றது. சிறுதொழிலில் முதலீடு செய்யும் நிலையான சொத்துக்களின் முதலீடு தொகை கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளன 1960, 1966 மற்றும் 1980 ஆம் ஆண்டில் நிலையானசொத்துக்களில் முதலீடு செய்யும் தொகையின் வரம்பு உயர்த்தப்பட்டுள்ளன. 1980ஆம் ஆண்டிலிருந்து இயந்திரம் மற்றும் பொறிகலன்களில் முதலீடு செய்யும் முதலீட்டின் வரம்பு ரூபாய் 20 இலட்சத்திலிருந்து 35 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. துணைத் தொழில்களில் (Ancillary Unit) முதலீடு செய்யும் பொறிகலன் மற்றும் இயந்திர சாதனங்களின் முதலீட்டின் வரம்பு 25 லட்சத்திலிருந்து 45 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. தற்பொழுது சிறு தொழில்களின் இயந்திரம் மற்றும் பொறிகலன்களின் முதலீடு ரூ.75 லட்சம் வரை உயர்த்தப்பட்டுள்ளது. (ஐக்கிய முன்னணி அரசில்) ஆனால் மீண்டும் தற்பொழுது Plant & Machinery Investment க்கு ரூ.3 கோடியிலிருந்து 1 கோடிக்கு குறைக்கப்பட்டுள்ளது. (BJP) அரசில் (Budget June 1998 source).

### துணைத் தொழில் (Ancillary Unit) என்றால் என்ன?

துணைத் தொழில் என்பது தொழிலின் ஒரு பிரிவாகும். பிற தொழிற்சாலைக்கு தேவையான உதிரி பாகங்களை உற்பத்தி செய்து வருவதே துணைத் தொழில் எனப்படும். பிறதொழிற்சாலைகள் இதன் முழுமையான பொருட்களை கச்சாப் பொருள்களாகவோ அல்லது உதிரி பாகங்களாகவோ பயன்படுத்தி வருகின்றது. எனவே துணைத் தொழிலின் முழுமையடைந்த பொருட்களை அதன் தாய் தொழில் நிறுவனம் மூலப்பொருள்களாக பயன்படுததி வருகின்றது. தற்பொழுது இதில் முதலீடு செய்யும் பொறிகலன் இயந்திர சாதனங்களின் முதலீட்டு தொகை ரூபாய் 25 இலட்சத்திலிருந்து 45 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. நல்ல தரமான உற்பத்தி பொருட்களை தனது பிரதான அல்லது முதல் வகை தொழிலுக்கு அளித்து வருகின்றது. தற்பொழுது 1 கோடி வரை துணைத்தொழிலின் முதலீட்டாக உயர்த்தப்பட்டுள்ளது.

### குறுந்தொழில் (Tiny Sector) என்றால் என்ன?

குறுந்தொழில் 1977ஆம் ஆண்டின் தொழில் கொள்கை தீர்மானத்தின் கீழ் (Industrial Policy Resolution) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறுந்தொழில் மிகவும் சிறிய தொழில் பிரிவை கொண்டதாகும். குறுந்தொழிலின் மூலதனத் தொகை ரூ.2 இலட்சம் வரை இருக்கும். குறுந்தொழில்கள் பெரும்பாலும் சிறிய நகரங்களிலும், கிராமங்களிலும் நடைபெறுகின்றது. இந்தியாவில் குறுந்தொழிலும், குடிசைத் தொழிலும் நலிவடைந்து போகாமல் இருக்க அரசாங்கம் அதற்கு தக்க பாதுகாப்பு வழங்கி வருகின்றது. மற்றும் இதற்கு தேவையான நிதிகளை அரசு நிறுவனங்கள் எவ்வித கட்டுப்பாடின்றி சலுகை அடிப்படையில் வழங்கி வருவதால் இந்த தொழில்கள் நலிவடைந்து போகாமல் அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

### சிறுதொழிலின் நோக்கங்கள் (Objectives of Small Scale Industry)(SSI)

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு சிறு தொழில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

### இந்த நோக்கங்கள் பின்வருமாறு

1. நிரந்தர வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றது. இதனால் நாட்டில் ஓரளவு வேலையில்லா திண்டாட்டம் குறைகின்றது. சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் படித்த இளைஞர்கள் சுயதொழிலில் ஈடுபட வாய்ப்பை ஏற்படுத்துகின்றது.
2. நுகர்வோர் பொருளின் தேவையை உருவாக்குவதால் சிறிய அளவு உற்பத்தியாளரின் பொருளின் தேவையை அதிகரிக்கச் செய்கின்றது.

3. மூலதன வளங்களை திரட்ட உதவுகின்றது. மனிதனின் திறமையை முழுமையாக பயன்படுத்தவும்.

4 கிராம பொருளாதாரம் வளர்ச்சியடையவும், நகரங்களில் பெரிய தொழில்கள் வளர்ச்சியடையவும் இவ்விரண்டையும் ஒருங்கிணைப்பதே சிறுதொழிலின் நோக்கமாகும்.

5. நாட்டின் தேசீய வருமானம் மற்றும் செல்வங்களை, நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கவும்.

6. நகரமயமாக்குதலில் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்கவும், பெரிய நகரங்கள், மற்றும் டவுண் போன்றவைகளின் வளர்ச்சியால் கிராமப்புறம் பாதிக்காமல் இருக்கவும் அதனை பாதுகாப்பதும் சிறுதொழில்களின் நோக்கமாகும்.

**சிறு தொழில்களின் முக்கியத்துவம் (Importance) அல்லது சிறுதொழில்களின் நன்மைகள் (Benefits) அல்லது சிறு தொழில்கள் ஆற்றும் சேவைகள் பற்றி கூறுக. (Role)**

சிறுதொழில்கள் இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏனென்றால் சிறுதொழில்கள் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்கின்றது. கிராம பொருளாதாரம் மேம்படையவும், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை தரம் உயரவும் சிறு தொழில்கள் பயன்படுகின்றன.

**சிறுதொழிலின் நன்மைகள் (அல்லது) பயன்கள் (அல்லது) சேவைகள்**

1. வட்டார சமநிலை நாட்டில் ஏற்பட சிறுதொழில்கள் உதவுகின்றன. (Regional Balance)

2. மக்களிடம் சிறு சேமிப்பு பழக்கம் ஏற்பட இது உதவுகின்றது. சிறுசேமிப்புக்கு இது உற்சாகப்படுத்துவதால் நாட்டில் சிறுதொழில்கள் பெருகி வருகின்றன.

3. சிறு தொழில்கள் வேலைவாய்ப்பை அதிகரிக்கின்றது. ஏனென்றால் அதிக அளவு தொழிலாளர்களும், குறைந்த அளவு முதலீடு செய்யும் நிலையிருப்பதால் நாம் சிறு தொழில்களை ஊக்கப்படுத்த வேண்டும். சிறு தொழிலை ஊக்கப்படுத்தினால்தான் குறைந்த செலவில் வேலை வாய்ப்பு அதிகரிக்க செய்ய முடியும்.

4. சிறுதொழிலே இந்திய பொருளாதாரத்திற்கு மிகவும் ஏற்றதாகும். ஏனென்றால் சிறு தொழிலுக்கு குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் பெற வாய்ப்பு உள்ளது. சிறு தொழில் தேசீய வருமானத்தையும், செல்வங்களையும் நியாயமான முறையில் எல்லா இடங்களுக்கும் பகிர்ந்தளிப்பதால் நாட்டின் பொருளாதாரம் சமநிலை அளிப்பதால் நாட்டின் பொருளாதாரம் சமநிலை அடைகின்றது. இதன் மூலம் வட்டார சமநிலை (Regional balance) ஏற்படுகின்றது. அதிகார குவிப்பு செல்வ குவிப்பு போன்றவைகள் ஒரு சில நபரிடம் குவிந்து இருப்பதை குறைப்பதால் முற்றுரிமை ஏற்பட வாய்ப்பு இல்லை.

5. சிறு தொழிலில் அதிகமான பணியாளர்கள் வேலை செய்வதால் இதனை மிகுதியான பணியாளர் கொண்ட (More Labour Intensive) தொழிலாகவும், குறைந்த முதலீடு இதில் காணப்படுவதால் இதன் குறைவான முதலீடு கொண்ட தொழிலாகவும் (Less Capital Intensive) விளங்குகின்றது.

6. தொழில் பரவலாக்கத்திற்கு சிறு தொழிலே ஏற்ற தொழிலாகும். (Decentralisation of Industry) அதாவது மக்கள் கிராமப்புறங்களிலிருந்து நகரம் நோக்கி செல்வதை தடுக்கவும். நகரத்தில் காணப்படும் மக்கள் நெருக்கத்தை கட்டுப்படுத்தவும், சிறு தொழில்கள் உதவுகின்றது. இதனால் மக்களின் உடல்நலம் பாதிக்காமல் அவர்களின் வாழ்க்கை தரம் உயருகின்றது.

7. சிறு தொழில் புதிய தொழில் முயல்வோருக்கு ஒரு வழிகாட்டியாக அமைவது மட்டுமல்லாமல் அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வழிவகை செய்கிறது. சிறு தொழில் நாட்டின் வளங்களை அதிகபட்ச (Optimum) அளவில் பயன்படுத்த தொழில் முனைவோருக்கு உதவுகிறது.

8. பெரிய தொழிலை காட்டிலும், சிறு தொழில் குறைந்த முதலீட்டில் உடனடி இலாபம் பெறமுடிகின்றது. இதில் முதலீட்டு அமைப்பு மிகவும் எளிதாக உள்ளது. (Capital formation is very easy).

9. இத்தொழிலக்கு குறைந்த திறன் கொண்ட தொழிலாளர்களை (Semi Skilled) அல்லது திறமையற்ற தொழிலாளர்கள் போதுமானது. இவர்களை கொண்டு சிறுதொழிலை எளிதில் நடத்த முடியும்.

10. உற்பத்தி செய்ய வெளிநாட்டு இயந்திர தளவாடங்கள் தேவையில்லை இதனால் அயல்நாட்டு முதலீடு தேவையில்லை உள்நாட்டில் உள்ள முதலீடு இந்த தொழிலுக்கு போதுமானது. எனவே அயல்நாடு முதலீடு தேவையில்லை.

11. குறைந்தக் காலத்தில் இந்த தொழிலை தொடங்குவதால் விரைவான உற்பத்தி நடைபெறுகிறது. இதனால் முதலீடு செய்ய தொகை வீணாகாமல் ஆக்கபூர்வமான நடைமுறைக்கு பயன்படுகிறது. எனவே முதலீட்டு தொகை வீணாக இருப்பதில்லை (No Idle Investment)

12. சிறு தொழிலின் செயல் மாற்றங்களை எளிதில் மாற்றி கொள்ள முடியும். அதாவது அரசாங்கத்தின் கொள்கை, நுகர்வோரின் தேவை, விருப்பம், எண்ணம், பழக்க வழக்கங்கள், சந்தையின் நிலை போன்றவைகளுக்கு தகுந்தவாறு சிறு தொழில் செயல்படுவதால் இது ஒரு நெகிழ்ச்சி தன்மைக் கொண்ட (Flexibility) தொழிலாக விளங்குகிறது.

13. நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் நல்ல உறவை ஏற்படுத்துவதால் இந்த தொழிலுக்கு தொழிற்சங்கம் தேவையில்லை. ஏனென்றால் தொழிலாளர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்ப்பது, அவர்களின் பிரச்சனைகளை சுமூகமாக தீர்த்து வைப்பது, போன்ற செயல்களை நிர்வாகம் உடனுக்குடன் கவனிப்பதால் இரண்டு தரப்பினர்களுக்கிடையே நல்ல தொழில் உறவு சிறு தொழிலால் ஏற்படுகின்றது.

14. சிறுதொழிலால் சுற்றுப்புற சூழ்நிலைகள் மாசு ஏற்பட வாய்ப்புகிடையாது. காற்று, நீர், சுற்றுப்புற சூழ்நிலைகளில் மாசு ஏற்படாமல் இந்த தொழில் பாதுகாத்து வருகின்றது. சுகாதார கேடு, குடியிருப்பு பிரச்சனை உடல் நலக்கேடு போன்றவைகள் ஏற்பட வாய்ப்பு இல்லை.

15. சிறு தொழில்கள் தொழிலாளர்களின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. இது விவசாய அமைப்புக்கும் பெரிய தொழில்களுக்கும் சிறப்பாக நடைபெறவும் இது உதவுகின்றது.

16. வெளிநாட்டுக்கு சிறு தொழில்களின் பொருட்கள் ஏற்றுமதி செய்வதால் நாட்டில் அந்திய செலவாணி பெருகுகின்றது. (எடுத்துக்காட்டு - கைவினைப் பொருட்கள்)

17. சிறு தொழில்கள் எளிதில் அமைத்து விடலாம். இதில் சட்ட சிக்கல் கிடையாது. சட்ட விதிமுறைகள் யாவும் எளிமையாக உள்ளன. விரைவான முடிவு எடுக்கப்படுகின்றன. குறைந்த தேவை குறைந்த முதலீடு, குறைந்த இடர்பாடுகள், விரைவான செய்தி கிடைப்பதால் உற்பத்தி தாமதம் ஏற்படுவதில்லை தனிக்கவனிப்பும், சிறப்பு சேவையும் இதன் முக்கிய நோக்கமாகயிருப்பதால் நல்ல தரமான பொருள் நுகர்வோருக்கு கிடைக்கின்றது. மேலே கண்டவைகள் யாவும் சிறு தொழில் மூலம் கிடைக்கும் பயன்கள் ஆகும்.

## சிறுதொழிலின் சிறப்பியல்புகள் (Characteristics of Small Scale Industries)

1. சிறுதொழில்கள் யாவும் கிராமபுறங்களில் காணப்படுகின்றது. அதனை நகர்புறம் மற்றம் டவுண் பகுதியில் பரவலாக்குவதால் நாட்டில் உள்ள படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு ஒரு நிரந்தரமான வேலைவாய்ப்பு ஏற்பட உதவுகின்றது. சுயதொழில் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோருக்கு தொழில் துவங்க வாய்ப்பு ஏற்படச் செய்கின்றது.

2. தனிப்பட்ட முறையில் நுகர்வோருக்கு மனநிறைவு கொள்ளவும், சிறப்பு சேவை அளிப்பதன் மூலம் அவர்கள் தன்னிறைவு அடையவும் சிறுதொழில் உதவுகின்றது.

3. இது தொழிலாளர்களை சார்ந்த தொழிலாகும். ஏனெனில் மனித வளமே இந்த தொழிலுக்கு அதிகமாக தேவைப்படுகிறது. எனவே தொழிலாளர்களின் உழைப்பை நம்பி இந்த தொழில் உள்ளது. (Labour Intensive Industry)

4 இது சுய வேலை வாய்ப்பு தொழில் அல்லது ஆள் வாணிபமாக (Self Employment or Sole Proprietory Concern) இருக்கின்றது. சில சமயங்களில் இது கூட்டாண்மை நிறுவனமாகவோ அல்லது கூட்டறவு சங்கமாக செயல்படலாம்.

5. மின்சாரம் பயன்படுத்தும் சிறுதொழில் என்றால் தொழிலாளர்களின் எண்ணிக்கை 50க்கு மேல் செல்லக் கூடாது. மின்சாரம், பயன்படுத்தாத சிறு தொழில் என்றால் தொழிலாளர்களின் எண்ணிக்கை 100க்கு மேல் போகக் கூடாது.

6. பெரிய தொழில்களுக்கு தேவையான உதிரிபாகங்களை அளித்து அதன் தேவையை சிறுதொழில்கள் நிறைவேற்றுகின்றது. (Act as a feeder to large Scale Business) துணைப்பிரிவு (Ancillary Unit) பெரிய தொழில்களுக்கு தேவையான உதரிபாகங்களை இது அளிக்கின்றது. இதன் முழுமையான பொருள் பெரிய தொழிலுக்கு மூலப்பொருளாக பயன்படுகின்றது. (Ancillary Unit finished goods used by Large Units as raw material for the Production) எனவே சிறு தொழில்கள் யாவும் பெரிய தொழிலுக்கு உணவு பொருள் போல் (Feeders) விளங்குகின்றது.

7 இதன் நிலையான முதலீட்டின் மதிப்பு ரூபாய் 1 கோடி வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ரூ. 3 கோடியிலிருந்து ரூ.1 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

8. அரசாங்கத்தின் ஆதரவும், அதன் ஒத்துழைப்பும் இதன் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாகயிருக்கின்றது.

9. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் பேட்டை (Industrial Estate) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறு தொழில்களுக்கு தேவையான இடங்களை பிளாட் அடிப்படையில் இந்த பேட்டை ஒதுக்குகின்றது. தொழில் பேட்டை சிறு தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றது தொழில் கூட்டுறவு சங்கங்கள் (Industrial Co-operative) சிறுதொழில்கள் இலாபகரமாக செயல்பட உதவுகின்றது.

### சிறு தொழில்களின் பிரச்சனைகள் (Problems of Small Scale Industries)

இந்தியாவில் சிறுதொழில்களும், குடிசைத் தொழில்களும், நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்திய பொருளாதாரம் வளர்ச்சியடையவும் கிராமப் பொருளாதாரம் மேம்படையவும், வேலை வாய்ப்பு பெருகவும் இந்த தொழில்கள் நமது நாட்டின் முதுகெலும்பாக விளங்குகின்றது. ஏனெனில் வளரும் நாடுகளின் சிறு தொழிலின் வளர்ச்சி முக்கியமானதாகும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த தொழில் தற்பொழுது பல்வேறு பிரச்சனைகளை சந்திக்க வேண்டிய காலக்கட்டத்தில் உள்ளது. இந்த பிரச்சனை நாம் சீர்தூக்கி பார்க்கும் பொழுது நமக்கு சில உண்மைகள் புலப்படும்.

### சிறு தொழில்களின் பிரச்சனைகள்

#### 1. தட்டுப்பாடான கச்சாப் பொருள்கள் (Scarce Raw material)

சிறு தொழில்களுக்கு தேவையான கச்சாப் பொருள்கள் முறையாகவும் ஒழுங்காகவும் கிடைப்பதில்லை தட்டுப்பாடான மூலப் பொருள்களினால் சிறு தொழிலின் உற்பத்தி தடைப்படுகிறது.

#### 2. அன்னிய செலவாணியை பெற முடிவதில்லை (Not to avail of foreign Exchange facility)

அரசு சிறு தொழிலி ் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியை ஊக்குவிக்காத காரணத்தாலும், உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யமுடியாத நிலையில் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய

வழியில்லாத காரணத்தினாலும், வெளிநாட்டு இயந்திரங்களை பயன்படுத்த முடியாமையும் அந்நிய செலவாணி மற்றும் வெளிநாட்டு முதல் போன்றவைகள் இந்தியாவில் குறைந்துக் காணப்படுகிறது.

**3. அதிகளவு சரக்குகளை தேங்கி வைக்க முடிவதில்லை.**

**4. வெளிநாட்டு சந்தையுடன் போட்டியிட முடிவதில்லை.**

அயல்நாட்டு சந்தையுடன் போட்டியிட முடியாததால் தேவை குறைகின்றது. ஏனெனில் இவைகள் உற்பத்திக்காக வெளிநாட்டு இயந்திரங்களை இறக்குமதி செய்வதில்லை. ஏனென்றால் இறக்குமதி இயந்திரத்திற்கு அந்நிய செலவாணி தேவைப்படுகிறது. ஆனால் சிறு தொழில்களுக்கு அந்நிய செலவாணி வசதி கிடைக்காத காரணத்தினால் அவர்கள் தங்களின் வெளிநாட்டு நிதியை இழக்க வேண்டியதுள்ளது.

**5. இறக்குமதி லைசன்ஸ் (Import Licence)**

இயந்திரங்களையும், கச்சாப் பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கு லைசென்ஸ் (உரிமம்) தேவைப்படும். இந்தியாவில் இறக்குமதி லைசென்ஸ் கிடைப்பது மிகவும் கடினமாக காரியமாகும். எனவே அவர்கள் தங்களின் தொழிலை கிராமங்களில் நடைபெறச் செய்வதால் மீண்டும் அதனை பெரிய அளவில் விரிவுப்படுத்த இயலாமல் போய்விடுகின்றது.

**6. மின்சார வசதியின்மை (Lack of Electricity Facility)**

குடிசைத் தொழிலுக்கும், சிறுதொழிலுக்கும் மின்சாரம் தேவைப்படுகிறது. தேவைக்கு ஏற்ப பொருளை அளிப்பதற்கு போதிய மின் வசதி வேண்டும். ஆனால் இந்த தொழில்கள் கிராமபுறத்தில் நடைபெறுவதால் இத்தகைய வசதி முறையாகவோ அல்லது ஒழுங்காக கிடைக்காமல் போய் விடுகிறது. மின்தடை அடிக்கடி கிராமங்களில் ஏற்படுகிறது.

**7. கடன் வழங்கும் முறையில் காணப்படும் கடினமான நடைமுறைகள் (To follow cumbersome procedure)**

அரசு அறிவித்த பின் தங்கிய இடங்களில் புதியதாக தொழில் நடத்தும் தொழில் முனைவர்களை பல்வேறு வழிகளில் ஊக்கமளிக்கின்றது. குறைந்த வட்டி சதவீதத்தில் கடன் மற்றும் முன் பணம் வழங்குகின்றது. அவர்களின் முதலீடு செய்த தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை மான்யமாக (Subsidy) வழங்குகின்றது ஆனால் இத்தகைய கடன்கள் பெறுவதற்குரிய நடைமுறை விதிகள் மிகவும் கடினமாகவும் குழப்பமாகவும் உள்ளது. மேலும் அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்பும் சரியாக இல்லை. இதனால் நிறைய தொழில் முனைவோர் தனியார் நிதி நிறுவனத்திடம் கடன் பெறுவதை விரும்புகின்றனர்.

**8. போதிய கல்வி அறிவு இல்லாமை (Lack of awareness)**

தொழிலதிபரும், தொழிலாளர்களுக்கும் போதுமான கல்வி அறிவு இல்லாதவர்களாக உள்ளனர். அவர்களுக்கு நவீன கணிப்பொறி உலகில் காணப்படும் மாற்றங்கள் தொழில் நுட்ப மாற்றம் போன்றவை தெரிய வாய்ப்பு இல்லை. எனவே உற்பத்தி மற்றும் சந்தையிடுகையில் உள்ள தொழில் நுணுக்கங்களை அவர்கள் அறியவில்லை தொழிற் கூடங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மிகவும் பழமை வாதிகள். அவர்கள் பழைய முறைகளை பின்பற்றுகின்றனர். புதிய முறைக்கு மாற்றம் காண அவர்கள் விரும்புவதில்லை.

**9. சந்தையிடுகை வசதி இல்லாமை (Lack of Market facility)**

இந்த தொழிலுக்கு போதுமான சந்தையிடுகை வசதி இல்லை. குறைந்தளவு உற்பத்தி, வெளிநபர்களிடம் பெறப்படும் கடனுக்கு அதிக வட்டி செலுத்துதல் போன்ற காரணங்களினால் இதன் அடக்க விலை மற்றும் நிர்வாக செலவு அதிகமாக உள்ளது. திறமையற்ற தொழிலாளர்கள் மின்சார வசதி போக்குவரத்து வசதி, சந்தை வசதி ஆகியவை இல்லாததால் மற்றும் புதிய தொழில் நுட்ப கருவிகளை பயன்படுத்தாமல் இருத்தல் புதிய தொழில் நுட்ப மாற்றங்களை அறிமுகம்

செய்யாதிருத்தல் போன்ற பல்வேறு காரணங்களால் இதன் உற்பத்தின் பொருளின் அடக்க விலையானது பெரிய தொழிலைவிட அதிகமாக உள்ளது.

### 10. போக்குவரத்து வசதி இல்லாமை (Poor Transport facility)

கிராமப் புறங்களில் சிறுதொழில் நடைபெறுவதால் உற்பத்திற்கு தேவையான கச்சாப் பொருள், உற்பத்தியான பொருளை சந்தையில் விற்க போக்குவரத்து தேவைப்படுகிறது. ஆனால் போதுமான போக்குவரத்து கிராமங்களில் காணப்படாததால் இதன் தொழில் நலிவடைந்து வருகின்றது.

11. பெரிய தொழில் நிறுவனங்களை நல்ல அமைப்பு முறையில் நிறுவ அதனை திறம்பட நிர்வாகிக்கின்றனர். கிடைக்கின்ற எல்லா வளங்களையும் திறம்படி பயன்படுத்துகின்றனர். இதனால் சிறுதொழில்கள் பெரிய தொழில்களுடன் போட்டியிட முடிவதில்லை.

12. கச்சாப் பொருள், மற்றும் இயந்திரம் வாங்குவதற்கு அதிக வரி செலுத்த வேண்டியதுள்ளது. மேலும் ஆயத்தீர்வை (Excise Duty) சுங்கவரி (Custom duty) நுழைவு கட்டணம் (Octori) ஆகிய வரிகள் செலுத்துவதால் சிறு தொழிலின் நிதி நிலைமை பாதிப்பு அடைகின்றது.

13. அரசு அதிகாரிகள் சிறு தொழில் முனைவோரை வித்தியாசமான கண்ணோட்டத்தில் (Indifferent attitude) பார்க்கின்றனர். போதிய ஒத்துழைப்பு வழங்க மறுப்பதால் சுமூகமான உறவு நிலவுவதில்லை.

மேலே கூறிய சிறு தொழில்களின் பிரச்சனைகளில் மிகவும் முக்கியமானவைகளாகிய.

1. மின் வசதி, போக்குவரத்து வசதி, சந்தையிடுகை வசதி இல்லாத காரணம்.
2. பழமையான உற்பத்தி முறையை கடைப்பிடிப்பது, புதிய தொழில் நுட்ப முறையை பின்பற்ற மறுப்பது.
3. திறமையற்ற பணியாளர்கள்
4. அந்நிய செலவாணி இல்லாத காரணம்.
5. அதிகமான வரிவிதிப்பு
6. தட்டுப்பாடு மற்றும் ஒழுங்கான முறையில் மூலப்பொருள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்காதது.
7. இறக்குமதி உரிமம் பெறுவதற்குரிய தடைகள்.
8. கடன் பெறும் முறைகளில் கடைபிடிக்கும் கடினமான விதிமுறைகள்.
9. அரசு ஊழியர்களின் போதிய ஒத்துழைப்பு இல்லாதது போன்றவைகள் முக்கியமான பிரச்சனையாகும்.

## சிறு தொழில்களின் பிரச்சனைகளை தீர்க்கும் வழிகள் (To Solve Small Scale Industries Problems)

### 1. கச்சாப் பொருள் மற்றும் இயந்திரம் வழங்குவது குறித்து

முன்னுரிமை அடிப்படையில் அரசாங்கம் கச்சாப்பொருள்களை ஒழுங்கான முறையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் தட்டுப்பாடான மற்றும் அத்தியாவசிய மூலப் பொருள்களை ஒழுங்கான முறையில் சிறுதொழில் நிறுவனத்திற்கு வழங்க வேண்டும். அதைபோல இயந்திரங்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து ஒழுங்கான முறையில் முன்னுரிமை மற்றும் மூப்பு அடிப்படையில் சிறு தொழில்களுக்கு வழங்க வேண்டும்.

### 2. மத்திய சிறுதொழில் அமைப்பு (Central Small Scale Organisation)

ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. இந்த அமைப்பானது சிறு தொழில்களுக்கு தேவையான தொழிலை பற்றிய அறிவு தொழில் திட்டம் மற்றும் நுணுக்கங்களை

அளிக்கின்றது. இது சிறு தொழில்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றது. தொழில் நுட்ப பிரச்சனைகளை தமது சேவை விவரிக்க மைய நிறுவனம் (Service Institute extension centre) மூலம் நிவர்த்தி செய்கின்றது.

3. **கடன் பெறும் முறைகளை எளிமையாக்குதல்**

கடன் பெறும் வழிமுறைகள் எளிமையாக்க வேண்டும்.

4. **தடையில்லா மின்சாரம்**

சிறுதொழில்களுக்கு தேவையான மின்சாரம் எந்த நிலையிலும் தடையில்லாமல் ஒழுங்கான முறையில் வழங்க வேண்டும்.

5. உற்பத்தியில் புதிய தொழில் நுட்பம் அறிமுகம் செய்தல். பதிய தொழில் நுட்பத்தை உற்பத்தியில் கடைபிடிக்க வேண்டும்.

6. குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டும. அரசு மான்ய தொகையையும் வழங்க வேண்டும்.

7. வரி சுமையை குறைக்க வேண்டும். வரி விதிப்பில் ஒரு சிலவற்றை குறைக்கலாம்.

8. சந்தை மற்றும் போக்குவரத்து வசதிகளை அதிகரிக்க வேண்டும்.

9. குறைகளை கண்டுபிடிக்க வேண்டும் என்ற வித்தியாசமான பார்வையில் சிறுதொழி முனைவோரை அரசு அதிகாரிகள் பார்க்கக் கூடாது. அவர்களுக்கு போதிய கல்வி அறிவு இல்லாததால் அவர்களை குறைத்து மதிப்பிடாமல் அவர்களை உற்சாகப்படுத்தும் முறையில் பேசி, அவர்களை நேரில் அணுகி அவர்களுடைய பிரச்சனைகளை நேரில் கேட்டலே போதும். அவர்களின் பிரச்சனைகள் ஓரளவு குறைந்துவிடும். இவ்வாறு அவர்களிடம் நெருங்கி பழகுவதன் மூலம் மனித நேயம் (Humanism) ஓங்கி நிற்கும் அவர்களுக்கும் ஒரு வித தாழ்வு மனப்பான்மை ஏற்படாமல் இருக்கும். ஈகோ, அந்தஸ்து ஆகியவைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மனித உரிமைகளை நிலைநாட்ட (Human Rights) அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

10. சிறு தொழில்களின் முக்கிய பிரச்சனையே விற்பனை (சந்தையிடுகை) செய்வதுதான். விற்பனை பிரச்சனைகள் நீக்க அரசாங்கம் தேசீய சிறுதொழில் நிறுவனம் (National Small Scale Industries) ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் விற்பனைக்கான பிரச்சனை தீர்த்து வைக்கின்றது. அரசாங்கத்திடமிருந்து பல்வேறு விற்பனை ஆணைகளை (Orders) இந்த நிறுவனம் வாங்கி சிறுதொழில்களுக்கு வழங்கின்றது. சிறுதொழில்கள் தமது பொருளை பாதுகாப்பு சேவை துறைக்கு (Defence Service) அளித்து வருகிறது.

11. தொழில் பேட்டை (Industrial Estate) ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட்டு சிறுதொழில்களின் வளர்ச்சி மேம்படைய உதவுகிறது. சிறுதொழில்களுக்கு தேவையான இடம், தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து, கழிப்பிடம்,பாதாள சாக்கடை, தகவல் தொடர்பு போன்ற அடிப்படை வசதிகளை இந்த தொழில் பேட்டை செய்து வருகின்றது.

12. **சிறு தொழில்களை பரவலாக்குதல் (Decentralisation of Industry)**

நகர்ப்புறங்களில் நெருக்கடிக்கு இடையே நடைபெறும் சிறுதொழில்களை கிராமப்புறங்களுக்கு மாற்றுவதால் சிறு தொழில்களின் வளர்ச்சி நாட்டின் பரவலாக காணப்படுகின்றது.

13. தொழில் கைவினைஞர்கள் (Industrial crafats) சிறு தொழிலதிபர்கள் ஒன்று சேர்ந்து தொழில் கூட்டுறவு மற்றும் கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். இந்த கூட்டுறவு அமைப்பானது சிறுதொழில்களின் பிரச்சனைகளாகிய உற்பத்தி, நிதி, இயந்திரம் பணியாளர்கள் போன்றவைகளை தீர்த்து வைக்கிறது. கூட்டுறவு தத்துவத்தின் அடிப்படையி இந்த அமைப்பு செயல்படுகின்றது. சிறுதொழிலுக்கு தேவையான நிதி, கச்சாப்பொருள்

இயந்திர சாதனங்கள் சந்தை வசதி போன்ற வசதிகளை வழங்கி வருகின்றது. உற்பத்தியான பொருளை இதில் உள்ள உறுப்பினர்களுக்கும் அளிக்கின்றது. மேற்கண்டவாறு கூறப்பட்ட வழிமுறைகளை கடைபிடித்தால் சிறுதொழில்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்கலாம்.

**சிறுதொழில்கள் ஏற்படுத்த (நிறுவ) வேண்டிய வழி முறைகள் (Guidelines of in setting upsmall scale industries)(Selection of Industry)**

1. சிறு தொழில் சேவை நிறுவனம் (Small Industry Service Institute)(SISI)புதிய தொழில் முனைவோருக்கு தொழில் நடத்த கூடிய இடத்தை தேர்ந்தெடுக்க வழிகாட்டுகின்றது. SISI தொழிலுக்கு தேவையான கச்சாப்பொருள் கிடைக்கும் வழிமூலங்களை காட்டுகின்றது. இந்திய முதலீட்டு மையம் தொழில் முனைவோருக்கு அரசு கொள்கை செயல்முறை, ஊக்கம், சலுகை கச்சாப்பொருள் கிடைக்கும் இடம் போன்றவைகளை வழி காட்டுகின்றது.

2. **தொழிற்கூடம் (Factory Accomodation)**

தொழிற்சாலை இயக்குநர் அலுவலகம் (Director of Industries) தொழில் பேட்டையில் உள்ள இடத்தில் தொழிற்சாலை கட்ட வசதி செய்து தருகின்றது.

3. **தொழில் பேட்டை (Industrial Estate)**

மாவட்டத்தில் தொழில் வளர்ந்துவரும் இடங்களில் தொழில் முனைவோருக்கு தொழிற்கூடம் கட்டி வழங்கி வருகிறது. அதல் பட்டறை (Work Shop) சலுகைவிலையில் தண்ணீர், மின்சாரம் போன்றவைகளை வழங்கி வருகிறது.

4. **பதிவு செய்தல் (Registration)**

சிறுதொழில் தொடங்குவதற்கு பதிவு செய்ய வேண்டிய கட்டாயமில்லை பதிவு செய்ய வேண்டுமாயின் தொழில் இயக்குநர் அலுவலகத்திடமிருந்து பதிவுக்கான எண் பெற வேண்டும்.

5. **பதிவு இயந்திரம் (Machinery)**

பல்வேறு விதமான பொருளை உற்பத்தி செய்ய தேவையான இயந்திரம் மற்றும் தளவாட பொருட்களை பற்றி ஆலோசனைகளை SISI வழங்குகின்றது.

6. **தேசீய சிறுதொழில் கழகம் (National Small Industries Corporation)(NSIC)**

NSIC வெளிநாட்டு இயந்திரங்களை சிறுதொழிலுக்கு தவணை முறை அடிப்படையில் இறக்குமதி செய்கின்றது. சிறுதொழில் நிறுவனத்திற்கு தவணை முறையில் வெளிநாட்டு இயந்திரங்கள் NSIC மூலம் கிடைப்பதால் உற்பத்தி அதிகரிக்கின்றது.

7. **கச்சாப்பொருள் (Rawmaterials)**

தொழிற்சாலை இயக்குநர் அலுவலகம் ஒதுக்கீட்ட (Quota) முறையில் தட்டுப்பாடான கச்சாப்பொருளை வழங்குகின்றது. மாநில சிறு தொழில் கழகமும் (State Small Scale Industries Corporation)(SSIC) கச்சாப்பொருளை வழங்குகின்றது.

8. **நிதி (Finance)**

மாநில நிதிக் கழகம் (State Finance Corporation)(SFC) நிலையான சொத்துக்களை வாங்க நீண்ட கால கடன்களை வழங்குகின்றது. பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் துணைவங்கிகள் கட்டிடம் கட்ட மற்றும் இயந்திரங்களை வாங்க மத்திய கால கடன்களை வழங்குகின்றது. வணிக வங்கிகள் நடைமுறை முதலுக்காக குறுகிய கால கடன்களை வழங்குகின்றது. தற்பொழுது மத்திய அரசு நிலையான சொத்துக்களின் முதலீடு ரூபாய் மூன்று கோடியிலிருந்து 1 கோடியாக குறைந்துள்ளது.

**9. தொழில் நுட்பம் (Technical Know - how)**

(SISI) உற்பத்திக்கான வரைபடம் வடிவம், திட்ட அறிக்கை (Project report) போன்றவைகளை தயாரிக்கின்றது.

**10. தரப்படுத்துதல் (Standardisation)**

நிர்ணயிக்கப்பட்டு தரத்திற்கு ஏற்றவாறு தொழில் நுட்ப ஆலோசனையை SISI உற்பத்தி பொருளுக்கு வழங்குகின்றது.

**11. உள்நாட்டு சந்தை (Internal Marketing)**

மாநில சிறு தொழில் கழகமானது மாநில அரசாங்கத்திடமிருந்து ஆணைபெற்று சிறுதொழில் பொருள்களை விற்க உதவுகின்றது. அதே போல தேசிய சிறு தொழில் கழகமானது மத்திய அரசிடம் ஆணை பெற்று இந்திய பாதுகாப்பு துறை, இரயில்வே துறைக்கு சிறு தொழில்களின் பொருள்களை விற்பனை செய்ய உதவுகின்றது.

**12. ஏற்றுமதி (Export)**

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடு அலுவலகமிடமிருந்து லைசென்ஸ் பெற்று அயல்நாடுகளுக்கு சிறுதொழில்களின் பொருளை ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

**13. பயிற்சி (Training)**

சிறுதொழில் விரிவாக்க பயிற்சி நிறுவனம் தொழில் மேலாண்மையினருக்கு பயிற்சி அளிக்கின்றது.

**சிறுதொழில் நிதி வழங்கும் நிதி நிறுவனங்கள் (Institutional Finance to Small Scale Industries)**

சிறு தொழில் துவங்கத் தொழில் முனைவோருக்கு நிதி தேவைப்படுகிறது. நிதியில்லாமல் எந்த தொழிலும் தொடங்க முடியாது. சிறு தொழிலுக்கு தேவையான நிலையான சொத்துக்களாகிய நிலம், கட்டிடம், பொறிகலன், இயந்திரம் ஆகியவைகளை வாங்குவதற்கு நிதி தேவைப்படுகிறது. குறைந்தபட்சம் 1 கோடி தேவைப்படுகிறது. இத்தகைய சொத்துக்களை வாங்க கீழ்க்கண்ட நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளை பெறலாம். அவை

1. சிறுதொழில் வளர்ச்சிக்கான அமைப்பு (Small Industries Development Organisation)(SIDO)
2. தேசீய சிறுதொழில் கழகம் (National Small Industries Corporation)(NSIC)
3. சிறு தொழில் சேவை நிறுவனம் (Small Industries Service Institute)(SISI)
4. தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (டான்சி) (Tamil Nadu Small Industries Corporation)(TANSI)
5. மாவட்ட தொழில் மையம் (District Industries Centre)(DIC)
6. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (The Tamil Nadu Industrial Investment Corporation) (TIIC)
7. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (Small Industrial Development Corporation of Tamil Nad (SIDC0) (சிட்கோ)
8. தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (State Industries Promotion Corporation of Tamil Nadu) (SIPCOT) (சிப்காட்)
9. கதர் கிராம தொழில் வாரியம் (Khadi and Village Industries Board)(KVIB)
10. கதர் கிராம தொழில் ஆணையம் (Khadi and Village Industries Commission)(KVIC)

சிறுதொழில்கள் விரைவான வளர்ச்சியடைய மத்திய மற்றும் மாநில அரசாங்கம் பல்வேறு நிதி உதவி திட்டங்களை வழங்கி வருகின்றது. நிதி உதவி திட்ட நிகழ்ச்சிகளை பல்வேறு

நிறுவனங்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. சில முக்கியமான நிறுவனங்களின் பணிகள் சேவைகள், உதவிகளை பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1. சிறுதொழில் வளர்ச்சிக்கான அமைப்பு (Small Industries Development Organisation) (SIDO)

சிறுதொழில் வளர்ச்சிக்கான அமைப்பு முறையானது (SIDO) தொழில் நிறுவன கட்ட அமைப்பில் மேல் நிலையில் காணப்படுகிறது. (Top Level Body)

1954ஆம் ஆண்ட மத்திய அரசால் SIDO நிறுவப்பட்டுள்ளது. இது மத்திய அளவில் செயல்படுகின்றது. இது மேலாளர், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சி அளிக்கின்றது. SIDO அமைப்பானது அகில இந்திய அமைப்பில் செயல்படுகின்றது.

**SIDO பணிகள் (Functions of SIDO)**

1. சிறுதொழில் மேம்பாட்டுக்கான பல்வேறு நலத் திட்டம் மற்றும் உதவி திட்டங்களை அகில இந்திய அளவில் செயல்படுகிறதா என கவனித்து வருகின்றது.
2. இது தொழில் நுட்ப நுணுக்கங்கள், மேலாண்மை, நிதி மற்றும் சந்தையியல் பற்றிய ஆலோசனைகள் மற்றும் உதவிகளை சிறு தொழிலுக்கு வழங்குகின்றது.
3. சிறு தொழிலுக்கு தேவையான கச்சாப் பொருட்கள் ஒழுங்காக கிடைக்க உதவி புரிகின்றது.
4. சில SSI பிரிவுகளுக்கு மட்டும் கச்சாப் பொருள்களை ஒதுக்கி வைத்து அதற்கு தட்டுப்பாடில்லாமல் கவனித்து வருகின்றது.
5. சிறுதொழில் வளர்ச்சிக்கான தொழில் துறை அமைச்சகம் திட்டக்குழு மாநில அரசாங்கங்கள், வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களுடன் SIDO நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தியுள்ளது. இதனால் SSI பிரிவுகளுக்கு தேவையான உதவிகளை வழங்கும் சம்பந்தபட்ட துறைகளுடன் SIDO நல் உறவை ஏற்படுத்துகின்றது.
6. சிறு தொழில் சம்பந்தமான கொள்கை முடிவு மற்றும் இதர நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு ஆகிய பணிகளை SIDO மத்திய மற்றும் மாநில அளவில் செயல்படுகின்றது.
7. சிறுதொழில் வளர்ச்சிக்காக ஏற்படுத்தும் அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றுகின்றது. சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து வசதிகளையும், உதவிகளையும் செய்து வருகின்றது.
8. இயந்திரங்களை தேர்ந்தெடுத்தல், இயந்திரங்களை வரிசைப்படுத்தும் முறை, இயந்திர வடிவம், கச்சாப் பொருள்களை கையாளும் முறை, உற்பத்திக்கான வழிகாட்டி போன்ற தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.
9. பொறியியல் துறையில் பட்டம் பெற்ற தொழில் முனைவோர், வேலையில்லா பட்டதாரி, அறிவியல் பட்டதாரி, டிப்ளமோ பட்டதாரி போன்றவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்சி திட்டத்தை SIDO அமைத்து நடத்தி வருகின்றது.
10. பொருளின் வடிவ பிரிவு (Design cell) ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. வாணிப நோக்கத்திற்காக இந்த பிரிவானது அதிக அளவில் வடிவங்களை உற்பத்தி செய்துள்ளது.
11. தொழில் பேட்டை (Industrial Estate) அல்லது கூடாரம் (Shed) கட்டிடத் தொழில் முனைவோருக்கு வாடகைக்கு விடுகின்றது. இதனால் இடப்பிரச்சனை, கட்டிடம் கட்டும் பிரச்சனை தொழில் முனைவோருக்கு ஏற்படாதவாறு தடுக்கின்றது.
12. Protype உற்பத்தியும், பயிற்சி மையமும் நடத்தி வருகின்றது.
13. உற்பத்தி மற்றும் செயல்முறை வளர்ச்சி மையம், மற்றும் சிறுதொழில் சேவை நிறுவனம் (SISI) ஆகியவை நான்கு வட்டார ஆய்வு மையங்களில் செயல்படுகிறது.
14. மாதிரி திட்டம், வரைபடம், திட்டமிடுதலின் வழிகாட்டி பொறிகலன் வழிகாட்டி போன்ற தொழில் நுட்பங்களை அச்சு வடிவில் வெளியிடுகின்றது.

SIDO அமைப்பானது இந்தியாவில் பரந்து காணப்படுகின்றது. இதில் 26 SISI உள்ளன. 32 வங்கி நிறுவனம் 40 விரிவாக்க மையம் 4 கருவி (Tools) பெட்டி 76 பொது பட்டறைகள் SISI உடன் இணைந்து செயல்படுகிறது.

## 2. தேசிய சிறுதொழில் கழகம்
### (National Small Industries Corporation)(NSIC'

தேசிய சிறுதொழில் கழகமானது (NSIC) 1955 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் முக்கிய பணியானது. தொழில் முனைவோருக்கு தேவையான இயந்திர சாதனங்களை வாடகை கொள்முதல் முறையில் (Hire Purchase System) வழங்கி வருகிறது. இதன் தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ளது. NSIC க்கு நான்கு வட்டார அலுவலகங்கள் உள்ளன. அவை டெல்லி, மும்பை, சென்னை மற்றும் கல்கத்தாவில் செயல்படுகின்றன. தேசிய அளவில் NSIC இரண்டு கிளை அலுவலங்கள் செயல்படுகிறது. NSIC ஒரு பொதுக் கம்பெனியாகும். இதன் பங்கு முதல் முழுவதும் முத்திய அரசே அளித்துள்ளது. ஆதலால் இது இந்திய அரசுக்கு முற்றிலும் சொந்தமான நிறுவனமாகும்

**நோக்கங்கள் (Objectives)**

1. சிறுதொழில்கள் நாட்டில் வளர்ச்சி அடையச் செய்வது.
2. பெரிய தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து சிறு தொழில்களை செயல்பட செய்வது.
3. இயந்திர தளவாட சாதனங்களை வாடகை கொள்முதல் திட்டத்தில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.
4. வெளிநாட்டில் உள்ள இயந்திரங்களை இறக்குமதி செய்ய வெளிநாட்டு கடன் அட்டை (Foreign Credit Card) வங்கி மூலம் வழங்க ஏற்பாடு செய்தல் போன்றவைகள் இதன் நோக்கமாகும்.

**NSICயின் பணிகள் (Functions of NSIC)**

1. பெரிய தொழில் கூடங்களுக்கு ஒரு துணைப் பிரிவாக இருந்து (Ancillary units) சிறு தொழில்களை வளர்ச்சியடையச் செய்வது.
2. சிறு தொழில்களுக்காக வாடகை கொள் முதல் முறையில் இயந்திர சாதனங்களை வாங்க உதவி செய்தல்.
3. சந்தையில் SSI பொருட்கள் எளிதில் விற்கவும் அல்லது அரசு துறைகளுக்கு விநியோகம் செய்ய அரசு ஆணைகளை பெற்று பொருள் அளிப்பது.
4. SSI பிரிவுகளுக்கு தேவையான கச்சாப் பொருள்களை பகிர்ந்து அளிக்கின்றது.
5. இதன் நோக்கமானது SSI பிரிவுகளுக்கு தேவையான நிதி உதவி வழங்கவும் மற்றும்; அதனை பாதுகாத்து அது நன்கு வளர்ச்சியடைய உதவுவது.
6. மத்திய அரசு பண்டகசாலைக்கு ஒப்பந்த அடிப்படையில் சிறு தொழில் பொருட்களை அளிக்க NSIC முகவராக செயல்படுகின்றது.
7. கடன் வசதி, தொழில் நுட்ப உதவிகளை சிறுதொழில் பிரிவுகளுக்கு வழங்குவது.
8. பெரிய தொழிலுக்கும், சிறிய தொழிலுக்கும் நல்உறவு ஏற்பட முயற்சி செய்வது மேலும் பெரிய தொழில்களுக்கு தேவையான உதிரி பாகங்கள், துணைப் பொருட்களை சிறிய தொழில்கள் உற்பத்தி செய்து பெரிய தொழில்களுக்குஅளிப்பதால் இரண்டும் ஒன்றுக்கொன்று பரஸ்பர உதவி செய்துக்கொள்ள (NSIC) உதவுகின்றது.
9. SSI உற்பத்தி செய்த பொருள்களுக்கு சந்தையை உருவாக்குகின்றது.

நிறுவனங்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. சில முக்கியமான நிறுவனங்களின் பணிகள் சேவைகள், உதவிகளை பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1. சிறுதொழில் வளர்ச்சிக்கான அமைப்பு (Small Industries Development Organisation) (SIDO)

சிறுதொழில் வளர்ச்சிக்கான அமைப்பு முறையானது (SIDO) தொழில் நிறுவன கட்ட அமைப்பில் மேல் நிலையில் காணப்படுகிறது. (Top Level Body)

1954ஆம் ஆண்ட மத்திய அரசால் SIDO நிறுவப்பட்டுள்ளது. இது மத்திய அளவில் செயல்படுகின்றது. இது மேலாளர், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சி அளிக்கின்றது. SIDO அமைப்பானது அகில இந்திய அமைப்பில் செயல்படுகின்றது.

**SIDO பணிகள் (Functions of SIDO)**

1. சிறுதொழில் மேம்பாட்டுக்கான பல்வேறு நலத் திட்டம் மற்றும் உதவி திட்டங்களை அகில இந்திய அளவில் செயல்படுகிறதா என கவனித்து வருகின்றது.
2. இது தொழில் நுட்ப நுணுக்கங்கள், மேலாண்மை, நிதி மற்றும் சந்தையியல் பற்றிய ஆலோசனைகள் மற்றும் உதவிகளை சிறு தொழிலுக்கு வழங்குகின்றது.
3. சிறு தொழிலுக்கு தேவையான கச்சாப் பொருட்கள் ஒழுங்காக கிடைக்க உதவி புரிகின்றது.
4. சில SSI பிரிவுகளுக்கு மட்டும் கச்சாப் பொருள்களை ஒதுக்கி வைத்து அதற்கு தட்டுப்பாடில்லாமல் கவனித்து வருகின்றது.
5. சிறுதொழில் வளர்ச்சிக்கான தொழில் துறை அமைச்சகம் திட்டக்குழு மாநில அரசாங்கங்கள், வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களுடன் SIDO நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தியுள்ளது. இதனால் SSI பிரிவுகளுக்கு தேவையான உதவிகளை வழங்கும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் SIDO நல் உறவை ஏற்படுத்துகின்றது.
6. சிறு தொழில் சம்பந்தமான கொள்கை முடிவு மற்றும் இதர நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு ஆகிய பணிகளை SIDO மத்திய மற்றும் மாநில அளவில் செயல்படுகின்றது.
7. சிறுதொழில் வளர்ச்சிக்காக ஏற்படுத்தும் அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றுகின்றது. சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து வசதிகளையும், உதவிகளையும் செய்து வருகின்றது.
8. இயந்திரங்களை தேர்ந்தெடுத்தல், இயந்திரங்களை வரிசைப்படுத்தும் முறை, இயந்திர வடிவம், கச்சாப் பொருள்களை கையாளும் முறை, உற்பத்திக்கான வழிகாட்டி போன்ற தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.
9. பொறியியல் துறையில் பட்டம் பெற்ற தொழில் முனைவோர், வேலையில்லா பட்டதாரி, அறிவியல் பட்டதாரி, டிப்ளமோ பட்டதாரி போன்றவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்சி திட்டத்தை SIDO அமைத்து நடத்தி வருகின்றது.
10. பொருளின் வடிவ பிரிவு (Design cell) ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. வாணிப நோக்கத்திற்காக இந்த பிரிவானது அதிக அளவில் வடிவங்களை உற்பத்தி செய்துள்ளது.
11. தொழில் பேட்டை (Industrial Estate) அல்லது கூடாரம் (Shed) கட்டிடத் தொழில் முனைவோருக்கு வாடகைக்கு விடுகின்றது. இதனால் இடப்பிரச்சனை, கட்டிடம் கட்டும் பிரச்சனை தொழில் முனைவோருக்கு ஏற்படாதவாறு தடுக்கின்றது.
12. Protype உற்பத்தியும், பயிற்சி மையமும் நடத்தி வருகின்றது.
13. உற்பத்தி மற்றும் செயல்முறை வளர்ச்சி மையம், மற்றும் சிறுதொழில் சேவை நிறுவனம் (SISI) ஆகியவை நான்கு வட்டார ஆய்வு மையங்களில் செயல்படுகிறது.
14. மாதிரி திட்டம், வரைபடம், திட்டமிடுதலின் வழிகாட்டி பொறிகலன் வழிகாட்டி போன்ற தொழில் நுட்பங்களை அச்சு வடிவில் வெளியிடுகின்றது.

SIDO அமைப்பானது இந்தியாவில் பரந்து காணப்படுகின்றது. இதில் 26 SISI உள்ளன. 32 வங்கி நிறுவனம் 40 விரிவாக்க மையம் 4 கருவி (Tools) பெட்டி 76 பொது பட்டறைகள் SISI உடன் இணைந்து செயல்படுகிறது.

## 2. தேசிய சிறுதொழில் கழகம்
### (National Small Industries Corporation)(NSIC'

தேசீய சிறுதொழில் கழகமானது (NSIC) 1955 ஆம் ஆண்டு நிறுவபட்டது. இதன் முக்கிய பணியானது. தொழில் முனைவோருக்கு தேவையான இயந்திர சாதனங்களை வாடகை கொள்முதல் முறையில் (Hire Purchase System) வழங்கி வருகிறது. இதன் தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ளது. NSIC க்கு நான்கு வட்டார அலுவலகங்கள் உள்ளன. அவை டெல்லி, மும்பை, சென்னை மற்றும் கல்கத்தாவில் செயல்படுகின்றன. தேசீய அளவில் NSIC இரண்டு கிளை அலுவலங்கள் செயல்படுகிறது. NSIC ஒரு பொதுக் கம்பெனியாகும். இதன் பங்கு முதல் முழுவதும் முத்திய அரசே அளித்துள்ளது. ஆதலால் இது இந்திய அரசுக்கு முற்றிலும் சொந்தமான நிறுவனமாகும்

**நோக்கங்கள் (Objectives)**

1. சிறுதொழில்கள் நாட்டில் வளர்ச்சி அடையச் செய்வது.
2. பெரிய தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து சிறு தொழில்களை செயல்பட செய்வது.
3. இயந்திர தளவாட சாதனங்களை வாடகை கொள்முதல் திட்டத்தில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.
4. வெளிநாட்டில் உள்ள இயந்திரங்களை இறக்குமதி செய்ய வெளிநாட்டு கடன் அட்டை (Foreign Credit Card) வங்கி மூலம் வழங்க ஏற்பாடு செய்தல் போன்றவைகள் இதன் நோக்கமாகும்.

**NSICயின் பணிகள் (Functions of NSIC)**

1. பெரிய தொழில் கூடங்களுக்கு ஒரு துணைப் பிரிவாக இருந்து (Ancillary units) சிறு தொழில்களை வளர்ச்சியடையச் செய்வது.
2. சிறு தொழில்களுக்காக வாடகை கொள் முதல் முறையில் இயந்திர சாதனங்களை வாங்க உதவி செய்தல்.
3. சந்தையில் SSI பொருட்கள் எளிதில் விற்கவும் அல்லது அரசு துறைகளுக்கு விநியோகம் செய்ய அரசு ஆணைகளை பெற்று பொருள் அளிப்பது.
4. SSI பிரிவுகளுக்கு தேவையான கச்சாப் பொருள்களை பகிர்ந்து அளிக்கின்றது.
5. இதன் நோக்கமானது SSI பிரிவுகளுக்கு தேவையான நிதி உதவி வழங்கவும் மற்றும்; அதனை பாதுகாத்து அது நன்கு வளர்ச்சியடைய உதவுவது.
6. மத்திய அரசு பண்டகசாலைக்கு ஒப்பந்த அடிப்படையில் சிறு தொழில் பொருட்களை அளிக்க NSIC முகவராக செயல்படுகின்றது.
7. கடன் வசதி, தொழில் நுட்ப உதவிகளை சிறுதொழில் பிரிவுகளுக்கு வழங்குவது.
8. பெரிய தொழிலுக்கும், சிறிய தொழிலுக்கும் நல்உறவு ஏற்பட முயற்சி செய்வது மேலும் பெரிய தொழில்களுக்கு தேவையான உதிரி பாகங்கள், துணைப் பொருட்களை சிறிய தொழில்கள் உற்பத்தி செய்து பெரிய தொழில்களுக்குஅளிப்பதால் இரண்டும் ஒன்றுக்கொன்று பரஸ்பர உதவி செய்துக்கொள்ள (NSIC) உதவுகின்றது.
9. SSI உற்பத்தி செய்த பொருள்களுக்கு சந்தையை உருவாக்குகின்றது.

10. இது இரண்டு தொழில் பேட்டைகளை கட்டி அதனை நிர்வாகம் செய்து வருகிறது.

11. டெண்டர் திட்டத்தில் அரசுக்குரிய பல்வேறு துறைகளுக்கு தேவையான பொருளை ஒப்பந்த அடிப்படையில் பொருள்களை அளிப்பதாக அரசிடமிருந்து ஆணை பெற்று பின்னர் NSIC சிறு தொழில்களுக்கு துணை ஒப்பந்தம் கொடுத்து அரசுக்கு தேவையான சிறுதொழில் பொருட்களை விநியோகம் செய்ய உதவுகின்றது.

## NSIC யின் சேவைகள் (Services of NSIC)

1 சிறுதொழில் பிரிவுக்காக NSIC யின் சேவை பரந்து விரிந்துக் காணப்படுகின்றது. மறைமுக நிதி வசதி செய்து கொடுக்கின்றது. கச்சாப்பொருள்களை அளிக்கின்றது. வாடகை கொள்முதல் திட்டத்தின் கீழ் இயந்திரங்களை வாங்க உதவுகின்றது. இதன் பயிற்சி மையத்தின் மூலமாக திறமையற்ற தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. வெளி சந்தை மூலமாக நல்ல தரமான சிறு தொழில் பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. NSIC நேரடியாக நிதி உதவிகளை சிறுதொழில்களுக்கு அளிப்பதில்லை. தட்டுப்பாடான கச்சாப்பொருள்களை சிறுதொழில் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கின்றது.

## NSIC யின் வளர்ச்சி மேம்பாட்டு செயல்கள் (Promotional Activities)

### 1. அரசு கொள்முதல் திட்டம்

NSIC யின் பட்டியலில் இடம்பெற்ற சிறு தொழில்களுக்கு உதவி செய்வது, டெண்டர் மூலம் கிடைத்த அரசு ஆணைகளை சிறு தொழில்களுக்கு வழங்கி அரசு துறைக்கு தேவையான பொருட்களை வழங்கி வருகிறது.

### 2. தொழில்பேட்டையை நிர்வாகம் செய்தல் (Management of Industrial Estate)

NSIC யானது இரண்டு மாதிரி தொழில் பேட்டைகளை கட்டியுள்ளது.

1. ஊக்லா (Okhla)(டெல்லி) என்ற இடத்திலும்.
2. நைனி (Naini)(Allahabad) என்ற இடத்திலும் இரண்டு தொழில் பேட்டைகளை (Industrial Estate) கட்டியுள்ளது.

### 3. Protype வளர்ச்சி மற்றும் பயிற்சி மையத்தை நிர்வாகம் செய்தல் (Adminstration of Protype Development & Training Centre)

இந்த மையத்தில் பல்வேறு Trade ல் (Fitter Turner, Electrician, Dinkere, Lathe Machinist) பணிபுரிந்த திறமையான பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆசிரியர்களுக்கு என தனிப்பயிற்சி நடத்தப்படுகின்றது. பொறியியலில் பட்டம் பெற்றவர்கள் தொழில் முனைவோராக மாற்றுவதற்கென பயிற்சி நடத்தப்படுகின்றது. சிறு தொழில்களுக்கு தேவையான பணி ஆணைகளை (Job orders) பெற்று தருவது இதன் பொது சேவையாக கருதப்படுகின்றது. Sandwitch என்ற பாடங்களும் இந்த மையத்தில் நடத்தப்படுகின்றது. மேலும் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு தனிப்பயிற்சி நடத்தப்படுகின்றது. இவைகள் யாவும் NSIC யின் சேவைகள் ஆகும்.

### 3. சிறுதொழில் சேவை நிறுவனம் (Small Industries Service Institute)(SISI)

சிறுதொழில் சேவை நிறுவனத்தை சுருக்கமாக (சிசி) SISI என அழைக்கப்படுகின்றது. இந்த சேவை நிறுவனமானது ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறு தொழில்களுக்கு தேவையான அனைத்து சேவைகளையும் இந்த நிறுவனம் செய்து வருகின்றது. SISI ஆனது 1956 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. SISI யின் சேவையானது தொழில் நுட்பம் தொழில் ஆலோசனைகள் மேலாண்மை செய்தல், விற்பனையை பெருக்குவது, பொருளாதார சேவைகள் போன்ற சேவைகளை சிறுதொழில்களுக்கு அளித்து வருகின்றது.

**SISI யின் சேவைகள் (Services of SISI)**

SISI யின் சேவைகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன. அவை.

**1. தொழிற்சாலையை (தொழில் கூடங்களை) தேர்ந்தெடுத்தல Selection of Industry**

எந்த இடத்தில் சிறு தொழில் தொடங்குவதற்கான இடத்தை தேர்ந்தெடுப்பது, கச்சாப்பொருள்கள் வாங்கவும் போக்குவரத்து வசதி, சந்தை வசதி, மின்சாரம் வசதி போன்ற வசதிகள் உள்ள இடத்தை தேர்ந்தெடுப்பது பற்றிய ஆலோசனைகளையும், அதனை பெறுவதற்கான வழிகளையும் தொழில் முனைவோருக்கு வழங்கி வருவதால் இதனை தொழில் முனைவோரின் தொழில் செய்வதற்கான இடத்தை தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டியாக விளங்குகின்றது.

**2. இயந்திரங்களை தேர்ந்தெடுப்பது (Selection of Machinery)**

பல்வேறு விதமான பொருட்களை உற்பத்தி செய்ய எந்த வகையான இயந்திர சாதனங்கள் தேவைப்படும் என்பதை தொழில் முனைவோருக்கு ஆலோசனை வழங்குகின்றது.

**3. பயிற்சி அளித்தல் (To Provide Training Facilities)**

நிறுவனத்தில் மேல்நிலையில் பணிபுரியும் மேலாண்மையினருக்கு என தனிப்பயிற்சி அளிக்கின்றது.

**4. ஏற்றுமதி (Export)**

மாநில வர்த்தக கழகத்தின் சிறு தொழில் ஏற்றுமதிக்கான உதவி திட்டத்தின் கீழ் சிறு தொழில்களின் பெயர்களை பட்டியல் தயார் செய்து வருகிறது. ஏற்றுமதி ஆணைகளை நிறைவேற்றுவதற்காக தொழில் நுட்ப ஆலோசனை சேவையை செய்துவருகின்றது. எந்தப் பொருட்களுக்கு ஏற்றுமதி சந்தையில் தேவை உள்ளது போன்ற விபரங்களையும் வழங்குகின்றது. ஏற்றுமதி மேம்பாட்டு குழுவின் உதவியுடன் தற்போதைய ஏற்றுமதியின் சந்தையின் நிலையை தெரிந்து கொள்ள முடிகின்றது.

**5. தரப்படுத்துதல் (Standarisation)**

முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் உற்பத்தியை ஒப்பிட்டு பார்க்க வேண்டிய தொழில் நுணுக்க வழிகாட்டியாக வழங்குகின்றது.

**6. தொழில் நுட்பம் மற்றும் நுணுக்கங்கள் (Technical know - how)**

உற்பத்திக்கு வேண்டிய வடிவம், படம் ஆகியவைகளை தயாரிக்கின்றது. Dies, Tools, Tigs மற்றும் Fixture போன்ற பொருள்களை தயார் செய்ய உதவுகின்றது. இயற்கை வளங்களாகிய Men, Material, Machinery ஆகியவைகளை அதிகபட்ச அளவில் பயன்படுத்தப்படுகின்றது. மேலாண்மை கட்டுப்பாடு வரைபடத்தை தயாரித்து அதிகபட்ச இலாபம் அடைய உதவுகின்றது. தொழில் மேலாண்மையில் உள்ள மேலாளர் மற்றும் மேற் பார்வையாளர்களுக்கு பயிற்சி அளிக்கின்றது. தொழிலாளர்கள் நல்ல திறமையுடையவர்களாக மாறுவதற்கு போதிய பயிற்சி அளிக்கப்படுகிறது. நவீன தொழில் நுட்பமுறைகளை செய்முறையில் (Demonstration) காட்டுகின்றது.

**7. உள்நாட்டு சந்தை (Internal Marketing)**

உள்நாட்டு சந்தையின் நிலையை அறிய ஆய்வு நடத்தி சிறு தொழில்களுக்கான தேவையை தெரிவதன் மூலம் சிறு தொழில்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. எந்த தொழில் பிரிவு அரசு ஆணையை பெறுகின்றதோ அந்த SSI பிரிவுக்கு தகுதி சான்றிதழ் வழங்குகின்றது. பொதுத்துறை மற்றும் தனியார் துறையில் உள்ள பெரிய தொழில்கள் மற்றும் நடுத்தர தொழில்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துகின்றது.

8. ஆய்வு கூடங்களை ஏற்படுத்துதல் (To Establish Laboratories)

பொருள்களை சோதனை செய்ய சிறுதொழில்களுக்கு ஆய்வு கூடம் தேவைப்படுகிறது. சொந்தமாக ஆய்வு கூடம் இல்லாத சிறுதொழில் முனைவோர் SISI யிடம் உள்ள ஆய்வு கூடங்களில் குறைந்த கட்டணத்தில் சோதனையை மேற்கொள்ள SISI உதவுகின்றது. மேலே கண்டவைகள் யாவும் SISI யின் சேவைகள் ஆகும்.

4. தமிழ்நாடு சிறுதொழில் கழகம் (The TamilNadu Small Industries Corporations)(TANSI)

தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தை சுருக்கமாக "டான்சி" (TANSI) என அழைக்கப்படுகிறது. அமெரிக்காவில் இதன் சேவை அதிக அளவில் பயன்படுகின்றது. ஒவ்வொரு மாநிலத்திலும் டான்சி என்ற நிறுவனம் சிறு பிரிவுகளாக மாநிலம் முழுவதிலும் செயல்படுகின்றது. டான்சியின் சேவையானது சிறுதொழில் முனைவோருக்கு பயன்படும் வகையில் அமைகின்றது. இது ஒரு அரசு நிறுவனமாகும். இதில் தயாராகும் பொருட்கள் மிகவும் தரமுள்ளதாக விளங்குகின்றது. ஆனால் இதன் விற்பனை விலை மிகவும் அதிகமாக உள்ளதால் உள்நாட்டு சந்தையில் நுகர்வோர் மத்தியில் இதன் தேவை குறைவாக காணப்படுகிறது. ஏனெனில் இதில் தயாராகும் பொருள் மற்ற நிறுவனத்தை விட உயர்ந்த தரமாயிருந்தாலும் விலையைப் பார்த்து மக்கள் தனியார் தயாரிக்கும் பொருட்களை வாங்குகின்றனர். டான்சியில் நல்ல தரமான மரத்தில் செய்யப்பட்ட பர்னிச்சர் கட்டில், பீரோ, மேஜை, நாற்காலி அதுபோல இரும்பு மற்றும் தகர உலோகங்களில் பர்னிச்சர் தயாரிக்கப்படும் பொருட்கள் யாவும் அரசு துறைகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

5. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (The Tamil Nadu Small Industries Development Corporation)(SIDCO)

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகத்தை சுருக்கமாக 'சிட்கோ' (SIDCO) என சுருக்கமாக அழைக்கப்படுகிறது. 1971ஆம் ஆண்டு பொதுத்துறை நிறுவனமாக மாறியுள்ளது. இது முற்றிலும் தமிழக அரசுக்கு சொந்தமானதாகும்.

இதன் நோக்கங்கள் (Objectives of SIDCO)

1. தமிழ்நாட்டில் உள்ள சிறு தொழில்கள் வளர்ச்சி அடையவும், அதற்கு தேவையான உதவிகளை செய்வதே SIDCO வின் நோக்கமாகும்.
2. சிறுதொழில் பிரிவுக்கு தேவையான சந்தையிடுகை செய்வது.
3. நலிவடைந்த சிறு தொழில்களை மீண்டும் அதற்கு புதுவாழ்வு கொடுத்து அது நலிவடையாமல் மறுவாழ்வு கொடுப்பது.
4. மின்சார வரிக்கான மான்யம் வழங்குவது.
5. மத்திய மற்றும் மாநில அளவில் வழங்கப்படும் முதலீட்டு தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகையை சிறுதொழில்களுக்கு மான்யமாக வழங்குதல்.
6. தொழில் பேட்டையில் சிறுதொழிலுக்கு மட்டும் இடம் ஒதுக்கி தருதல் பணிபுரிய கூடாரம் போன்றவைகளை அளித்தல்.
7. கிராமம் மற்றும் மிகவும் பின் தங்கிய இடத்தில் நடைபெறும் குறுந்தொழிலுக்கு (Tiny Sector) தேவையான கூடாரம் (Shed) கட்டி தருதல்.
8. சிறு தொழில்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து அதன் வளர்ச்சியை மேம்படுத்துதல்.
9. முக்கியமான கச்சாப் பொருட்களை கிடைக்கவழி செய்வது.
10. மத்திய மற்றும் மாநிலங்களிடமிருந்து சிறு தொழில்களுக்கு கிடைக்க வேண்டிய மான்யத்தை பெறுவதற்காக SIDCO முகவராக செயல்படுகின்றது.
11. தண்ணீர் இடவசதி, சந்தை வசதி, கச்சாப் பொருள் தட்டுப்பாடு இல்லாமல் பெறுவது

மின்வசதி, மான்யம் கிடைக்க வழி செய்வது தொழிற்கூடம் போன்ற அனைத்து வசதிகளையும் சிறுதொழில்களுக்கு கிடைக்க SIDCO உதவுகின்றது.

**SIDCOவின் சேவைகள்**

1. **அனைத்து வசதிகளையும் கொண்ட முழுமையான சிறுதொழில் (Infrastructural Facilities)**

எந்தவித குறையும் இல்லாத எல்லா வசதிகளையும் கொண்ட சிறுதொழில்களாக மாற அனைத்து வசதிகளையும் SIDCO அளிக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில் பேட்டையின் செயல்பாட்டு எல்லையானது SIDCO வின் எல்லைக்குள் இருக்க வேண்டும்.

1. கிராமம் மற்றும் பின் தங்கிய இடங்களில் உள்ள குறுந்தொழிலுக்கு தொழில் கூடாரம் கட்டி தருவது.
2. வாடகை கொள்முதல் திட்டத்தின் கீழ் பட்டறை கூடாரம் கட்டி தருவது.
3. வளர்ந்து வரும் இடங்களில் இடம் (பிளாட்) (Plot) ஒதுக்கி தருவது.

2. **சந்தையினை பெருக்க உதவுதல்** Marketing Assistance

1. சிறுதொழில் முனைவோர்கள் ரூ.100 கட்டணம் செலுத்தி சிட்கோவின் சந்தை உதவி திட்டத்தை பயன்படுத்தி கொள்ளலாம்.
2. சிட்கோவில் உள்ள கலப்பணி அதிகாரிகள் (Field officers)

   சிறுதொழில் பிரிவுகள் நடைபெறும் இடத்திற்கு நேரடியாக வருகை தருவார்கள்.
3. சிறுதொழில் தயாரித்த பொருட்களை சோதனை செய்து நல்ல தரமான பொருள்களுக்கு I.S.I I.S.O. முத்திரை வழங்கி I.S.I I.S.O சான்றிதழை இதன் ஆய்வு கூடம் வழங்குகின்றது.
4. சிறுதொழிலின் அடக்க விலையை சிட்கோ ஆய்வு பார்க்கின்றது. இதனால் கணக்கு ஏடுகளில் எந்த விதமான மோசடியோ தவறுகளோ நடக்க வாய்ப்பு இல்லை.
5. சிறுதொழில்களுக்காக அரசாங்கம் மற்றும் பொதுத்துறையிடமிருந்து ஆணைகளை பெற்று தருகின்றது. அந்த ஆணையின்படி சிறுதொழில்களின் பொருட்கள் அரசு துறைக்கு விநியோகம் செய்யப்படுகின்றது.
6. வணிக மையம் ஒன்றை ஏற்படுத்த SIDCO திட்டமிடப்பட்டுள்ளது.
7. சிறுதொழில்களின் பொருட்களை விற்பனை செய்கின்றது.

3. **கச்சாப் பொருள்களை விநியோகம் செய்தல்** (Distribution of Raw Material)

1. தட்டுப்பாடான கச்சாப் பொருட்களை சேகரித்து அதனை ஒதுக்கீடு முறையில் சிறு தொழில்களுக்கு சிட்கோ விநியோகம் செய்கின்றது.
2. தேவையான பொழுது கச்சாப் பொருள்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து சிறு தொழில்களின் தேவையை பூர்த்தி செய்கின்றது.
3. மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து சிறு தொழில்களுக்காக மான்யம் பெற்று அதனை சிறுதொழில்களுக்கு வழங்குவதால் இது ஒரு முகவராக செயல்படுகிறது.
4. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு தொழிலுக்கு பத்து சதவீத மான்யம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
5. அரசு அறிவித்த பின்தங்கிய இடங்களில் முன்னாள் படை வீரர்கள். இந்திய குடியிருப்பு நிலை அல்லாத நபர்கள் (Non - Resident Indian). ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடி இனத்தை சேர்ந்தவர்கள் புதியதாக தொழில் முனைவோராக ஈடுபட்டால் அவர்களுக்கு தேவையான வசதிகள், ஊக்கங்கள், சலுகைகள் வழங்கி அவர்களை தொழில் முனைய

உற்சாகப்படுத்த 1986 ஆம் ஆண்டு சிட்கோ 10 சதவீத மான்யம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

4. நலிந்த சிறு தொழில்களுக்கு புணர்வாழ்வு அளிக்கும் திட்டம் (Rehabilitation of sick units)

சிறுதொழில்கள் தமிழ்நாட்டில் நலிவடையாமல் அதனை பாதுகாக்கவும், ஏற்கனவே நலிவு அடைந்த தொழில்களை மீண்டும் அது செயல்பட அதற்கு புணர்வாழ்வு அளித்து அதனை பாதுகாத்து வருவதும் இதன் கடமையாகும்.

5. தண்ணீர் மற்றும் காற்றினால் மாசுபடிவதைத் தடுக்க தொழில் பூங்கா ஏற்படுத்துதல் (Industrial parks to prevent Water & Air pollution)

சிட்கோ நிறுவனம் சுற்றுப்புற சூழல்களை பராமரித்து வருவதால் தொழிற்பேட்டையில் உள்ள தொழில் கூடங்களில் தண்ணீர் மற்றும் காற்றினால் மாசுபடியாமல் இருக்கின்றது. மரங்களை வளர்ப்பதாலும் நச்சுப் பொருள் நீரில் மற்றும் காற்றில் கலக்காமல் இருக்க தொழில் பூங்காவை ஒவ்வொரு தொழில் பேட்டையிலும் சிட்கோ ஏற்படுத்தியுள்ளது. இதனால் தொழிலாளர்கள் மக்கள் உடல்நலம் பாதிக்காமல் பாதுகாக்கப்படும் சுற்றுப்புற சூழலினால் தொழில் நடைபெறும் இடம் ஆரோக்கியமாக விளங்குகின்றது. மேலே கண்டவைகள் யாவும் சிட்கோவின் சேவைகளாகும்.

## மாவட்ட தொழில் மையம்
## (District Industries Centre)(DIC)

மாவட்ட தொழில் மையம் (DIC) ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ளன.

அரசின் தொழில் கொள்கையின் நோக்கமானது சிறிய நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் உள்ளது சிறு தொழில்கள் குடிசைத் தொழில்கள் வளர்ச்சி அடையவும், மேம்படைவதும் ஆகும். இந்த நோக்கத்திற்காக மத்திய அரசு 1978 ஆம் ஆண்டு மே மாதம் 1-ந் தேதி மாவட்ட தொழில் மையம் என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதன் நோக்கமானது மாவட்ட அளவில் உள்ள சிறு தொழில்கள் குடிசை குறுந்தொழில்கள் வளர்ச்சி அடையவும், பரவலாக்கப்பட்ட தொழில்கள் அனைத்தும் தேவையான சேவைகளையும் உதவிகள் வழங்குவதாகும்.

### மாவட்டத் தொழில் மையத்தின் பொருள் விளக்கம் (Meaning of DIC)

மாவட்டத் தொழில் மையம் என்ற நிறுவனம், மாவட்ட அளவில் செயல்படுகிறது. தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழில் மையம் உள்ளன. DIC ஒரே இடத்தில் காணப்படும், சிறு தொழில் முனைவோர்களுக்கு தேவையான சேவைகளையும் வசதிகளையும் வழங்குகின்றது. மாவட்டத்தில் ஒரு இடத்தில் செயல்படும் அல்லது வட்டார அளவில் செயல்படும் தொழில் முனைவோர்களுக்கு தேவையான சேவைகளையும், உதவிகளையும் DIC வழங்குகின்றன. DIC மத்திய அரசின் பண உதவியால் ஏற்படுத்தப்பட்டு செயல்படுகிறது. ஆனால் நிர்வாகம் யாவும் மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளன.

### மாவட்ட தொழில் மையத்தின் பணிகள் (Functions of DIC)

**ஆய்வு மற்றும் புலனாய்வு (Survey and Investigation)**

1. DIC ஆனது பழமையான முறைகள், புதிய தொழில்கள் கச்சாப் பொருள்கள் மனிதவளங்கள் ஆகியவைகளை ஆய்வு செய்கின்றது.
2. பல்வேறு பொருட்களுக்கு திட்டங்களை வகுத்து அதன் சந்தையினை முன்கூட்டியே அறிவது.
3. தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார சாத்தியகூறு பற்றிய மாதிரி அறிக்கையை தயார் செய்வது மற்றும் தொழில் முனைவோருக்கு முதலீடு பற்றிய ஆலோசனை வழங்குவது.

**2. இயந்திர சாதனங்கள் (Machinery & Equipments)**

1 சிறுதொழில், குறுந்தொழில் மற்றும் குடிசைத் தொழிலுக்கு தேவையான இயந்திர சாதனங்களை கண்டு பிடிப்பது DIC ன் கடமையாகும்.

2. எந்த இடத்தில் இயந்திர சாதனங்கள் கிடைக்கும் என்ற விபரத்தை தொழில் முனைவோருக்கு வழிகாட்ட வேண்டும்.

3. DIC ஆனது ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு தவணை கொள்முதல் முறையில் இயந்திர சாதனங்களை தொழில் முனைவோருக்கு அளித்து வருகின்றது.

**3. கச்சாப் பொருட்கள் (Raw Materials)**

1. பல்வேறு சிறு தொழில்களுக்கு தேவையான கச்சாப் பொருள்களை கண்டுபிடிப்பது.

2. எந்த இடங்களில் கச்சாப் பொருள்கள் கிடைக்கின்றன என்பதை அறிகின்றது.

3. கச்சாப் பொருளின் விலை, போக்குவரத்து செலவு ஆகிய விபரங்களை சேகரித்து தொழில் முனைவோருக்கு அதை பற்றிய செய்திகளை வெளியிடுகின்றது. மேலும் கச்சாப் பொருள் கிடைக்கும் இடத்திலிருந்து கச்சாப் பொருள்களை ஏற்றி தொழில் கூடங்கள் இருக்கும் இடத்தில் அவற்றை இறக்குவது வரை உள்ள பணிகளை DIC மேற்கொள்கின்றது.

**4. கடன்வசதி (Credit Facility)**

கச்சாப்பொருள், இயந்திர வசதி ஆகிய உதவிகளுடன் கடன் வசதியும் DIC ஏற்பாடு செய்கின்றது. சிறுதொழில் முனைவோருக்கு தேவையான நிதி வசதிகளை பல்வேறு நிதி நிறுவனங்களுடன் DIC தொடர்பு கொண்டு கடன் வசதி ஏற்பாடு செய்து கொடுக்கின்றது.

**5. சந்தை (விற்பனை) வசதி (Marketing)**

சந்தியின் நிலையை தெரிந்துக் கொள்ளவும், நுகர்வோரின் விருப்பம், தேவை, உணர்வு ஆகியவைகளை அறிந்துக் கொள்ளவும் DIC சந்தையை பற்றி ஆய்வு நடத்துக்கின்றது. மேலும் சந்தை வளர்ச்சி திட்டம் ஒன்றையும் நடத்தி வருகின்றது. சந்தையில் ஆய்வு மூலம் கிடைக்கும் விபரங்களை தொழில் முனைவோர்களுக்கு தெரியப்படுத்துகின்றது. இதனால் சந்தையில் சிறுதொழில்களின் தேவையை அவர்களால் உணர முடிகின்றது. அரசு சேகரிக்கும் முகவருடன் சந்தை ஒப்பந்தம் அமைகின்றது. இதன் மூலம் சந்தையின் உண்மையான நிலையானது தொழில் முனைவோருக்கு தெரிய வருகின்றது.

**6 ஆராய்ச்சி விரிவாக்கம் மற்றும் பயிற்சி (Research Extension and Training)**

சிறுதொழில் சேவை நிறுவனத்தின் (SISI) உதவியுடன் பல்வேறு பயிற்சிகளை சிறுதொழில, குறுந்தொழில் முனைவோருக்கு அளிக்கின்றது. DIC இன் உதவியுடன் அவர்கள் சிறப்பான பயிற்சியை பெறுகிறார்கள்.

**7. கதர் மற்றும் கிராமிய தொழில்கள் (Khadi and Village Industries)**

கதர் மற்றும் கிராமிய தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் DIC ஆனது அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. எ.கா. பத்தி, மெழுகுவர்த்தி, வாசனை திரவியங்கள், தேன், காலணிகள், தோல் பொருட்கள், சோப்பு, கதர் ஆடைகள், கைவினைப் பொருட்கள் ஆகியவை குடிசை மற்றும் கதர் கிராமிய தொழிலில் செய்யப்பட்டவையாகும்.

மாநில கதர் கிராமிய வாரியத்துடன் DIC நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது. மேலும் இந்த வாரியத்தின் உதவியுடன் கிராமிய கைவினை கலைஞர்களுக்கு (Village Artisans) தேவையான பயிற்சி அளிக்கின்றது.

கச்சாப் பொருள்கள், நிதி, சந்தை, தரக்கட்டுப்பாடு வசதிகள் போன்ற சேவைகளையும், உதவிகளையும் DIC சிறு தொழில்களுக்கு அளித்து வருகின்றது. பல்வேறு அரசு துறைகளிடமும்,

முகவர்களிடமும் தேவையான உதவிகளை பெற்று சிறு தொழில் வளர்ச்சிக்கு DIC பாடுபடுவதால் DIC ஒருங்கிணைப்பாளராக விளங்குகின்றது.

### 8. தொழில் திட்டத்தை தேர்ந்தெடுத்தல் (Selection of Projects)

DIC ஆனது புதியதாக தொழில் முனைவோருக்கு தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குகின்றது. அவர்களுக்கு பொருத்தமான தொழில் திட்டங்களை தேர்வு செய்து வழங்குகின்றது.

### 9. சிறுதொழில் பிரிவுகளை பதிவு செய்தல் (Registration of SSI units)

தொழில திட்டத்தின்படி தொழிலை தேர்ந்தெடுத்த பின்னர் DIC ன் உதவியுடன் சிறு தொழில் பிரிவுகளை பதிவு செய்ய வேண்டும். சிறு தொழில்களை பதிவு செய்வதன் மூலம் வங்கிகள் நிதி நிறுவனங்களில் கடன் வசதி பெற முடிகின்றது. எனவே கடன் வசதி பெற சிறுதொழில்கள் கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டும்.

### 10. நிலையான சொத்துக்களை வாங்குதல் (Purchase of Fixed Assets)

நிலையான சொத்துக்களாகிய நிலம், கட்டிடம் வாங்குவதற்கான கடன் விண்ணப்ப பாரங்களை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகம் (SIDCO) மற்றும் வங்கிகளிடமிருந்து பெற்று அதனை தொழில் முனைவோருக்கு வழங்கி அதன் பின்னர் நிரப்பப்பட்ட விண்ணப் பாரங்களை T I I C, S I D C O மற்றும் வங்கிகளிடம் வழங்கி நிலையான கடன்களை தொழில் முனைவோர் பெற D I C உதவுகின்றது.

### 11. பயிற்சி திட்டம் (Training Programme)

தொழில் முனைவோர் வளர்ச்சி என்ற திட்டத்தில் DIC தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிக்கின்றது.

### 12. மான்ய திட்டங்கள் (Subsidy Schemes)

பல்வேறு மான்யம் மற்றும் சலுகைகள் சிறுதொழில் முனைவோர் பெறுவதற்காக பல உதவிகளை DIC செய்கின்றது. மின்சார கட்டணம், தண்ணீர் கட்டணம், வரி செலுத்துதல் போன்றவைகளில் மான்யம் வழங்குதல், வரிச் சலுகை, முத்திரை கட்டணத்திற்கு விலக்கு அளித்தல் போன்ற சலுகைகள் சிறுதொழில் முனைவோருக்கு கிடைக்க வழி செய்கின்றது.

### 13. விற்பனை வரிக் கடனுக்குரிய வட்டி இலவசம் (Interest free Sales Tax Loan)

சிறுதொழிலில் உள்ள மொத்த சொத்துக்களில் அதிக பட்சமாக 85 சதவீதம் விற்பனை வரிக் கடனாக சிட்கோவில் (SIDCO) பெறும் பொழுது அந்த சிறு தொழிலானது நகர்புறங்களில் செயல்பட வேண்டும். அவ்வாறு நகர்புறங்களில் உள்ள சிறுதொழில்களுக்கு வழங்கப்பட்ட விற்பனை வரி கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி செலுத்த தேவையில்லை (வட்டி இலவசம்) இந்த கடன் DIC வழங்குவதற்கு ஆணை பிறக்கின்றது. அரசுக்கு தேவையான பொருள்களை சிறுதொழில் நிறுவனத்திடம் பெறுவதற்காக தேசீய சிறுதொழில் கழகத்திடம் (NSIC) சிறுதொழில்கள் பதிவுசெய்து அதன் பரிந்துரையின்படி அரசுக்கு தேவையான பொருள்களை விநியோகம் செய்யும் வாய்ப்பு DIC அளிக்கின்றது.

### 14. சுயதொழில் திட்டம் (Self Employment Schemes)

படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் DIC பல்வேறு வேலைவாய்ப்புக்களை இளைய தலைமுறைக்கு அளிக்கின்றது. இவ்வாறு சிறு தொழில், குறுந்தொழில் மற்றும் குடிசை தொழில் வளர்ச்சியடையவும் DIC பல்வேறு சேவைகளையும் உதவிகளையும் அளிக்கின்றது.

### ஊக்குவிப்புகள் (Incentives) சலுகைகள் (Concessions)

நாட்டில் சிறுதொழில் குறுந்தொழில், குடிசை தொழில்கள் வளர்ச்சி ஏற்படுவதற்காக அரசாங்கம் சிறுதொழில் முனைவோர்களுக்கு பல்வேறு சலுகைகள் (Concessions) மான்யங்கள் (Subsidies) மிகை ஊதியம் (Boundies)(போனஸ்) போன்ற பணம் சம்பந்தப்பட்ட ஊக்கவிப்புக்களை அளித்து வருகின்றது. ஊக்குவிப்புகள் (Incentives) என்பது சலுகைகள் மான்யங்கள் மற்றும் ஊக்குவிப்புக்கள் போனஸ் (மிகை ஊதியம்) ஆகியவை அடங்கும்.

### மான்யம் (Subsidy)

என்பது தொழிலில் முதலீடு செய்த தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அரசாங்கம் இலவசமாக தொழில் முனைவோருக்கு வழங்குவதாகும். இவ்வாறு மான்யம் வழங்குவதால் தொழில் முனைவோருக்கு ஊக்குவிப்பு ஏற்படுகின்றது. சிறு தொழில்களில் செயல் ஊக்கம் பெற மான்யம் வழங்கப்படுகிறது.

### எடுத்துக்காட்டு

ஒரு தொழில் தொடங்க முதலீட்டு தொகை ரூ.2,00,000 என்றால் அந்தத் தொகையில் அரசாங்கம் 15 சதவீதம் இலவசமாக தொழில் முனைவோருக்கு வழங்குவதாகயிருந்தால் மான்யத் தொகையாக ரூ.30,000 கிடைக்கின்றது.

### போனஸ் (மிகை ஊதியம்) (Bounties)

போனஸ் என்பது நிதி உதவியாக அரசாங்கம் தொழில் முனைவோருக்கு வழங்குவதாகும். போனஸ் வழங்குவதின் நோக்கமானது நிதி உதவி அளிப்பதால் நல்ல தரமான பொருட்களை உற்பத்தி செய்யவும், அயல் நாட்டு சந்தையில் வியாபாரம் செய்யவும் இது வழங்கப்படுகிறது.

### ஊக்குவிப்பின் நோக்கங்கள் (Objectives of Incentives)

### சேமிக்கும் பழக்கம் (To mobilise Savings)

வரிக்கு ஊக்குவிப்பு அளிப்பதால் மக்களிடையே சேமிக்கும் பழக்கம் ஏற்படுகின்றது. வரிக்கு சலுகையிருப்பதால் முதலீட்டில் பணம் செலுத்தி வரியை சேமிக்கின்றனர்.

### 2. முதலீட்டிற்கான வழி (To Channalise Investment)

முதலீட்டாளர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் ஊக்கம் அளிப்பதால் அவர்கள் பொருளாதார நடவடிக்கையில் இறங்குகின்றார்கள்.

### 3. வளங்களை வட்டார அளவில் சமநிலை ஆக்குதல் (To Correct Regional Imbalance)

கிடைக்கக்கூடிய வளங்களை அதிகபட்ச அளவில் பயன்படுத்துவதால் வட்டார அளவில் வளங்கள் சமநிலையில் காணப்படும். எனவே தொழில் முனைவோர் மிகவும் பின் தங்கிய இடத்தில் தொழிலை ஆரம்பித்தாலும் அவருக்கு இயற்கை வளங்களாகிய கச்சாப்பொருள், இயந்திரம் மனித வளம் கிடைக்கின்றது. மத்திய மற்றும் மாநில அரசு பல்வேறு ஊக்குவிப்புக்களை தொழில் முனைவோருக்கு வழங்கி பின் தங்கிய இடங்களில் தொழில் தொடங்க வைக்கின்றது. கடன் வசதி, வட்டியில்லா கடன் மான்யம், மின் கட்டண சலுகை, தண்ணீர் கட்டண சலுகை, கூடார வசதி, நிதி வசதி, சந்தை வசதி இயந்திர இறக்குமதி வசதி போன்ற வசதிகளை வழங்கி அவர்களை ஊக்கமளித்து வருகின்றது.

### 4. தொழில் முனைவு வளர்ச்சி ஏற்பட (To Develope Entreprenureship)

தொழில் வளர்ச்சி நாட்டில் ஏற்பட வேண்டும் என்றால் தொழில் முனைவை ஊக்குவிக்க வேண்டும். சுயவேலை வாய்ப்புக்காக பல்வேறு சுயதொழில் திட்டங்கள் உள்ளன. கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை பயிற்சி (Training of Rural Youth for Self Employment) (TRYSEM)

(டிரைசம்) என்ற திட்டத்தை ஆரம்பித்ததன் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

## சிறுதொழில்களின் மேம்பாட்டிற்காக தமிழக அரசு அளித்துள்ள ஊக்குவிப்புகளும், சலுகைகளும் (Incentives and Concessions to promote Small Scale Industries Provide by Tamil Nadu Government)

சிறுதொழில் வளர்ச்சி மேம்பாட்டிற்கான தமிழக அரசு பல்வேற அரசு நிறுவனங்களை முகவராக அறிமுகப்படுத்தி உள்ளது. அந்த முகமை நிறுவனங்கள் மூலம் சிறு தொழில முனைவோருக்கு ஊக்குவிப்புகளும் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. சில முக்கியமான அரசு முகமை நிறுவனங்கள் பின்வருமாறு.

1. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)()டிக்)
2. தமிழ்நாடு சிறுதொழில் கழகம் (டான்சி) (TANSI)
3. தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்) (SIPCOT)
4. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) (SIDC)

தமிழ்நாடு அரசு கீழ்க்கண்டவைகளை ஊக்குவிப்புக்களாகவும் சலுகைகளாகவும் வழங்கி வருகிறது.

### 1. முதலீட்டில் வழங்கும் மானயம்

நிலையான முதலில் மூலதன தொகை ரூ.15 இலட்சத்திற்குள் இருந்தால் 15 சதவீதம் மான்யமாக பின்தங்கிய இடத்திற்கு அளிக்கப்படுகிறது.

அ) **தற்பொழுது நிலையான முதல் மூலதன தொகை மாற்றப்பட்டுள்ளது**

நிலையான முதலின் மூலதன தொகையின் மதிப்பு ரூபாய் 20 இலட்சத்திற்குள் இருந்தால் 20 சதவீதம் முதலீட்டுத் தொகையில் மான்யம் வழங்கப்படுகின்றது.

ஆ) ஒரு சிறுதொழில் கூடததில் 30 சதவீதத்திற்கு மேல் பெண்கள் பணிபுரிந்து நிலையான முதலின் மூலதனதொகை (Fixed Capital Investment) ரூபாய் 25 இலட்சத்திற்குள் இருந்தால் - 25 சதவீதம் முதலீட்டு தொகையில் மான்யம் அளிக்கப்படும்.

### 2. விற்பனை வரிக் கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி இலவசம் (Interest Free Sales Tax Loan)

நிலையான சொத்தில் 20 சதவீதம் அல்லது ரூபாய் 20 இலட்சம் இதில் ஒது குறைவான தொகையோ அதனை இலவச வட்டியாக விற்பனை வரிக் கடனுக்கு அனுமதிக்கப்படுகின்றது.

#### தகுதி

இந்த சலுகை பெற வருட விற்பனை ரூ. 4000க்கும் குறையாமல் எந்த சிறுதொழில் செலுத்துகின்றதோ அதற்கு இந்தச் சலுகை கிடைக்கும்.

#### இருப்பிடம்

இந்த சலுகை பெற வேண்டுமாயின் சென்னை நகர்புறத்தில் 15கி.மீ. தூரத்தில் தொழில் கூட்டம் இருக்க வேண்டும். கோயம்புத்தூருக்கு 8 கி.மீ. தூரத்திற்குள் இருக்க வேண்டும் ஏனைய ஊர்களுக்கு இலவச வட்டி மீதான விற்பனை வரிக்கடன் பொருந்தாது.

### 3. மின்சார கட்டணச் சலுகை (Concessional Power Tariff)

புதிய சிறு தொழில் கூடத்திற்கு கீழ்கண்டவாறு மின்கட்டண சலுகை அளிக்கப்படுகிறது.